ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(மலர் – 4) Aug 2007



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

"ஸ்ரீ அஹோபில தாஸன்" க. ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

> கைப் பொருள்கள் முன்னமே கைக் கொண்டார் காவிரி நீர்
> செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
> எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
> சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## அடியேன் உரை

இந்த மாதம், தேவகியின் புத்திரனும், யசோதையின் பிள்ளையும் ஆகிய க்ருஷ்ணனின் திருஅவதார நன்னாளாகிய ஜன்மாஷ்டமி (04.09.2007) வருகிறது. க்ருஷ்ணனின் அடியார்கள் அனைவராலும் இந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டாலும், வட மாநிலங்களில், குறிப்பாக க்ருஷ்ணன் அவதரித்த வ்ரஜ்பூமியில், இந்த நன்னாள் மிகவும் சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. அந்த மக்கள் ஒவ்வொருவரும் அவனைத் தங்கள் வீட்டுப்பிள்ளை என்று ஆழமாக எண்ணியபடி, அவனுக்குப் பிறந்தநாள் என்று கொண்டாடுகின்றனர். நம்முடைய பக்தியை நாம் ஆண்டாள் அளவிற்கோ அல்லது கோபிகைகள் அளவிற்கோ உயர்த்தினால், அவன் யசோதையிடம் ஆப்புண்டு நின்றதுபோல், நம்மிடமும் நிற்பான் என்பதில் ஐயமில்லை. அர்ஜுனன் போன்று அவன் முன்பாக – எனக்கு ஏதும் தெரியாது, நீயே வழி நடத்து – என்று கூறினால், தானே நமக்கு ஞானகுருவாகி நிற்பான்.

க்ருஷ்ணனின் ஜன்மாஷ்டமி நாளுக்கு மற்றொரு பெரும் சிறப்பும் உள்ளது. அந்தச் சிறப்பு – ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையின் திருநக்ஷத்ரமும் அதே நாள் – என்பதாகும். க்ருஷ்ணனின் அவதாரமாகவே இந்த உலகில் அவதரித்த பெரியவாச்சான்பிள்ளை நமக்கு அளித்த ஐச்வர்யம் என்னவெனில், ஈடு–இணை இல்லாத வ்யாக்யானங்கள் ஆகும். பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யானங்களாலேயே ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு உயர்வு என்று கூறலாம்படி அவரது வ்யாக்யானங்கள் அமைந்துள்ளன. அந்த நன்னாளை ஒட்டி, இந்த இதழில் ஸ்வாமியைப் பற்றிய வைபவம் தொடக்கத்திலேயே இடம் பெற்றுள்ளது. மேலும் பெரியதிருமுடியடைவு என்ற நூலில் உள்ள ஸ்வாமியைக் குறிப்புகளும் இறுதியில் இடம் பெற்றுள்ளன.

ஸர்வம் க்ருஷ்ணார்ப்பணம் … வாஸுதேவம் ஸர்வம்

ஸ்ரீ அஹோபில தாஸன்

க. ஸ்ரீதரன்

# உட்பொதிவு


1. ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வைபவம்
2. ஸ்ரீ ரங்கராஜஸ்தவம்
3. ஸ்ரீபாஷ்யம்
4. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம்
5. முமுக்ஷுப்படி
6. சிறிய திருமடல்
7. அமலனாதிபிரான்
8. ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வைபவம்

(ஸ்வாமியின் க்ரந்தங்கள் இன்றளவும் நமக்குக் கிடைக்கிறது என்றால் அதற்குக் காரணமாக உள்ளவர் திருச்சிராப்பள்ளி புத்தூர் அட்வகேட் ஸ்வாமி உ.வே. ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்பதை யாராலும் மறுக்க இயலாது. இதே பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட திருவரங்கம் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ உ.வே. ஸ்ரீ க்ருஷ்ணமாசார்யார் ஸ்வாமியின் அச்சுப்பணிகளும் அளவிட இயலாதவையாகும். புத்தூர் ஸ்வாமியின் பதிப்பான திருப்பாவை வ்யாக்யானங்களில் உள்ள பெரியவாச்சான்பிள்ளை வைபவத்தினைத் தழுவி அடியேன் இங்கு சிலவற்றை அமைத்துள்ளேன்).



ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை

### தனியன்

ஸ்ரீமத் க்ருஷ்ண ஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே
யத் கடாக்ஷை கலக்ஷ்யாணாம் ஸூலப: ஸ்ரீதரஸ் ஸதா

பொருள் – யார் ஒருவரின் கடாக்ஷம் இருந்தால் மஹாலக்ஷ்மியை எப்போதும் தரித்தவனான ஸ்ரீதரன் நம்மால் எளிதாக அடையும்படி இருப்பானோ, யார் ஒருவர் யாமுனாசார்யரின் பிள்ளையோ, யார் ஒருவர் ஸ்ரீக்ருஷ்ணர் என்ற பெயரை உடையவரோ – அப்படிப்பட்ட பெரியவாச்சான்பிள்ளைக்கு எனது நமஸ்காரங்கள்.

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை ஸர்வஜித் வருடம், ஆவணி மாதம், க்ருஷ்ணாஷ்டமியில், ரோஹிணி நக்ஷத்ரத்தில் (கி.பி. 1167) அவதரித்தார். சோழ நாட்டின் தஞ்சாவூரில் உள்ள, திருவெள்ளியங்குடி என்ற க்ஷேத்ரத்தின் அருகில் உள்ள, சங்கநல்லூரில் அவதரித்தார். அங்கு பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவரான யாமுனாசார்யருக்கும் நாச்சியாரம்மனுக்கும் புத்திரராகத் தோன்றினார். இவர் தன்னுடைய சகோதரியின் பிள்ளையான நாயனாராச்சான்பிள்ளையை ஸ்வீகாரப் புத்திரனாகக் கொண்டார்.

பெரியபெருமாளின் ப்ரபாவத்தைப் பேசி முடித்தாலும் முடிக்கலாம், பெரியவாச்சான்பிள்ளையின் ப்ரபாவத்தைப் பேசி முடிக்க இயலாது என்று போற்றப்படும் இவர் போன்று இதுவரை யாரும் பிறக்கவில்லை, இனிமேலும்

பிறக்கப்போவதும் இல்லை. கருணையே வடிவமாக இருந்ததால் இவருக்கு பரமகாருணிகர், அபாரகருணாம்ருதஸாகரர் என்ற பல சிறப்புப் பெயர்கள் இவருக்கு உண்டு.

நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு வ்யாக்யானம் செய்தவர் இவர் ஒருவரே ஆவார். ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கு, அவரது வ்யாக்யானங்களைத் தவிர புரிந்து கொள்வதற்கு வேறு கதியில்லை. இவருடைய வ்யாக்யானங்களைக் கேட்டு மகிழ்ந்த உகப்பில், நம்பெருமாள் இவருக்கு – அபயப்ரதராஜர் – என்ற திருநாமம் சூட்டி மகிழ்ந்தான்.

பெரியதிருமொழியில் (7–10–10) – மெய்ம்மை சொல்லில் வெண்சங்கம் ஒன்று ஏந்திய கண்ண நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தான் – என்று திருமங்கையாழ்வார் அருளினார். அவர் திருக்கண்ணமங்கை க்ஷேத்ரத்தின் நாதனான கண்ணபிரான் தன்னிடம் தனது திருமொழியின் பொருளைக் கற்கவேண்டும் என்ற ஆவலுடன் உள்ளதை அறிந்தார். அதனால் மேலே உள்ளது போன்ற வரிகள் அருளிச் செய்தார். அவர் க்ருஷ்ணனிடம் – நீ என்னிடம் இதன் பொருளைக் கேட்டு அறிந்து கொள்ளலாம் – என்றார். உடனே கண்ணன் – ஆழ்வாரே, இந்த அர்ச்சாவதாரத்தில் அது கூடாது. நீவிர் பின் ஒரு காலத்தில் திருக்கலிகன்றிதாஸர் என்ற திருநாமத்துடன் அவதரிப்பீர். அப்போது நான் க்ருஷ்ணன் என்ற திருநாமத்துடன் அவதரித்து, உம்மை எனது ஆசார்யனாகக் கொண்டு அனைத்தையும் அறிவேன் – என்றான். அதன்படி திருமங்கையாழ்வாரே, நம்பிள்ளை என்று கொண்டாடப்படும் திருக்கலிகன்றிதாஸராக அவதரித்தார். அவரிடம் சிஷ்யனாக க்ருஷ்ணனே பெரியவாச்சான்பிள்ளையாக அவதரித்தான்.

## ஸ்வாமியின் வாழித்திருநாமம்

தண்மை சிங்கம் ரோகிணிநாள் தழைக்க வந்தோன் வாழியே
தாரணியில் சங்கநல்லூர் தானுடையோன் வாழியே
புன்மை தவிர் திருவரங்கர் புகழுரைப்போன் வாழியே
பூதூர் எதிராசர்தாள் புகழுமவன் வாழியே
மன்புகழ் சேர் சடகோபர் வளமுரைப்போன் வாழியே
மறை நூலின் பொருள் தன்னைப் பகுத்துரைத்தான் வாழியே
அன்புடன் உலகாரியர்தம் அடியிணையோன் வாழியே
அபயப்ரததாசர் தாள் அனவரதம் வாழியே

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீரங்கராஜஸ்தவம்
(பகுதி – 4)

31. மணிமகரருசீ: விதத்ய பாசாந் விஸ்ருமரகேது
கரை: ம்ருகம் ஹிமாம்சோ,
ஸ்ரீய இவ நவ கேளயே ஜிக்ருக்ஷு:
ஸுகயதி ரங்கபுரீ சகாஸதீ ந:

பொருள் – திருவரங்கத்தில் உள்ள அனைத்து மாடமாளிகைகளின் மீதும் மகரதோரணங்கள் கட்டப்பட்டுள்ளன. அவை கட்டப்பட்டுள்ள கொடிக்கம்பங்கள் கைகள் போன்று உள்ளன. இவை திருவரங்கம் என்ற பெண் விரித்த வலை போன்று உள்ளது. இதன் மூலம் இந்தப் பெண், ஸ்ரீரங்கநாச்சியார் விளையாடி மகிழ்வதற்காக சந்திரனில் உள்ள மாயமானைப் பிடிக்க முயல்வது போன்று உள்ளது. இவ்விதம் பெரியபிராட்டியை மகிழ்விக்கும் திருவரங்கம், நம்மையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியபடி உள்ளது.

32. ஜநபத ஸரித் அந்தரீப புஷ்யத் புர பரிபாலந நித்ய ஜாகரூகாந்
ப்ரஹரண பரிவார வாஹந ஆட்யாந் குமுதமுகாந் கணநாயகாந் நமாமி

பொருள் – பெரியபெருமாளின் அனுபவத்தில் ஈடுபட்டபடி உள்ளவர்களுக்காகவே காவேரியின் நடுவில் திருவரங்கம் திகழ்கிறது. இப்படிப்பட்ட திருவரங்கத்தைக் காப்பதில் குமுதன் முதலான கணநாதர்கள் எப்போதும் மும்முரமாக உள்ளனர். தகுந்த ஆயுதங்கள், பரிவாரங்கள், வாகனங்கள் போன்றவற்றுடன் உள்ள அவர்களை வணங்குகிறேன்.

33. அஹ்ருத ஸஹஜ தாஸ்யா: ஸூரய: ஸ்ரஸ்த பந்தா:
விமல சரம தேஹா இதி அமீ ரங்கதாம
மஹித மனுஜ திர்யக் ஸ்த்தாவரத்வா: ஸந்த:
ஸுநியதம் இதிஹ ஸ்ம ப்ராஹு: ஏப்ய: நம: ஸ்தாத்

பொருள் – கைங்கர்யம் என்ற செல்வத்தை இயற்கையாகவே உடைய நித்யசூரிகள், ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்ட முக்தஜீவன்கள், அடுத்து வரும் பிறவிகள் இனி இல்லை என்பது போன்றுள்ள முமுக்ஷுக்கள் – இவர்கள் அனைவரும் மனிதப்பிறவி, பசு முதலான பிறவி, தாவரங்களாகப் பிறவி ஆகியவற்றை ஏற்று, திருவரங்கத்தில் உள்ளனர் என்று பௌராணிகர்கள் கூறினர். இப்படிப்பட்ட அவர்களுக்கு எனது நமஸ்காரங்கள் உரித்தாகுக.

34. ஸ்ரீரங்க திவ்ய பவநம் புவி கோபுராணாம்
ப்ரகாரிதேந நிகரேண கருத்மதா இவ
பார்ச்வ ப்ரஸாரித பதத்ர புடேந பக்த்யா
நாநாதநூபி: உபகூடம் உபக்நயாம:

பொருள் – (பெரியகோயிலைக் கூறுகிறார்) – இந்தக் கோபுரங்களின் இருபக்கங்களிலும் அழகான திருமதிள்கள் உள்ளன. இவற்றைக் காணும்போது, பரமபதத்திலிருந்து இங்கு வந்துள்ள பெரியபெருமாளின் மீது உள்ள ப்ரேமை காரணமாக, பெரிய திருவடியான கருடன், தனது இரு சிறகுகளையும் விரித்து, மறைத்துக் காப்பது போன்று உள்ளது. இப்படிப்பட்ட பெரியகோயிலை நமது பற்றுக்கம்பாகப் பிடித்துக் கொள்வோம்.

35. ப்ராகார மத்யே அஜிர மண்டப உக்த்யா
ஸத்வீப ரத்நாகர ரத்நசைலா
ஸர்வம்ஸஹா ரங்கவிமாந ஸேவாம்
ப்ராப்தா இவ தத் மந்திரம் ஆவிரஸ்தி

பொருள் – ஏழு த்வீபங்கள், ஏழு ஸமுத்திரங்கள், மஹாமேரு ஆகியவற்றுடன் கூடியவளாக உள்ள பூமிப்பிராட்டி, திருவரங்கத்தின் விமானத்தைத் தரிசிக்க வந்தனள் போலும். இவையே மதிள்களாகவும், சேர்க்கும் வீதிகளாகவும், திருமண்டபங்களாகவும் உள்ளது போன்று காட்சியளிக்கிறது.

விளக்கம் – ஏழு ப்ராகாரங்களை ஏழு ஸமுத்திரங்களாகக் கூறினார். அவற்றின் இடையே உள்ள இணைக்கும் பகுதிகளை, ஏழு த்வீபங்களாகக் கூறினார். ஆங்காங்கு உள்ள உயர்ந்த கோபுர மண்டபங்களை, மேரு மலையாகக் கூறினார். இப்படியாகப் பூமிப்பிராட்டி தனது பரிவாரங்களுடன் திருவரங்க விமானத்தைத் தரிசனம் செய்ய வந்ததாகக் கூறுகிறார்.

36. ஜித பாஹ்ய ஜிந ஆதி மணிப்ரதிமா: அபி
வைதிகயந் இவ ரங்கபுரே
மணிமண்டப வப்ர கணாந் விதநே
பரகாலகவி: ப்ரணமேமஹி தாந்

பொருள் – வேதங்களுக்குப் புறம்பாகப் பேசிய ஜைனர்கள் முதலானவர்களை, அவர்களுக்கு யமன் போன்றுள்ள திருமங்கையாழ்வார், தனது வாதத்தால் அவர்களை வென்றார். தங்கத்தாலும் மணிகளாலும் செய்யப்பட்ட அவர்களது விக்ரஹங்களை வைதிகங்களாக மாற்றினார். இதன் மூலம் திருவரங்கப் பெருநகரில் அழகான மண்டபங்களையும், மதிள்களையும் அமைத்தார். அவற்றை நாம் வணங்குவோமாக.

37. ஸ்மேர ஆநந அக்ஷிகமலை: நமத: புநாநாந்
தம்ஷ்ட்ரா கதா ப்ருகுடிபி: த்விஷத: துநாநாத்
சண்ட ப்ரசண்ட முகத: ப்ரணமாமி ரங்க
த்வார ஆவளீஷு சதஸ்ருஷு அதிகாரபாஜ:

பொருள் – மலர்ந்த தாமரை போன்ற முகங்களும், அழகான கண்களும் கொண்டு, பெரியபெருமாளை நாடி வருபவர்களை தூய்மைப்படுத்துகின்றனர். பெரியபெருமாளின் விரோதிகளையும், அவனது அடியார்களின் விரோதிகளையும் தங்களது கோரைப் பற்களாலும், புருவ நெறிப்பாலும் அச்சம் கொள்ளச் செய்கின்றனர். திருவரங்கத்தின் நான்கு நுழைவாயில்களையும் காவல் காக்கும் அதிகாரம் பெற்றவர்கள் – இப்படிப்பட்ட சண்டன்–ப்ரசண்டன் முதலான த்வாரபாலகர்களை நான் வணங்குகிறேன்.

விளக்கம் – திருவரங்கப் பெரியகோயிலின் தெற்கு வாயில் – பத்ரன்–ஸுபத்ரன், வடக்கு வாயில் – தாத்ரு–விதாத்ரு, மேற்கு வாயில் – ஜயன்–விஜயன், கிழக்கு வாயில் – சண்டன்–ப்ரசண்டன் ஆகியவர்களால் காவல் காக்கப்படுகின்றன.

38. ஸர்வ ஆத்ம ஸாதாரண நாத கோஷ்டீ
பூரே அபி துஷ்பூர மஹாவகாசம்
ஆஸ்த்தாநம் ஆனந்தமயம் ஸஹஸ்ர
ஸ்துாணாதிநா ஆம்நாதம் அவாப்நவாநி

பொருள் – அனைத்து ஆத்மாக்களுக்கும் பொதுவானவனாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் அடியார்கள் கோஷ்டி கொண்டு நிரப்பிவிட முயற்சித்தாலும் நிரப்ப இயலாத அளவிற்கு பரந்த இடம் உள்ளது, ஸஹஸ்ரதூணே என்று தொடங்கும் உபனிஷத் வரியின் மூலம் கூறப்பட்டது, பரமபதத்தைப் போன்று ஆனந்தமயமானது – இப்படிப்பட்ட திருமாமணி மண்டபமாகிய ஆயிரக்கால் மண்டபத்தை நான் அடைவேன்.

39. விஹரதி ஹரௌ லக்ஷ்ம்யா லீலா ஆதபத்ர பரிஷ்க்ரியா
விநிமயவிதா ஸௌநாஸௌநிக்ரியா ஸபல உத்பலாம்
அத முநி மந: பத்மேஷு அப்ஜா ஸஹாய விஹாரஜ
ச்ரமஹர தடீம் யாம: தாம் ஐந்தவீம் அரவிந்திநீம்

பொருள் – ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீரங்கநாச்சியாருடன் இணைந்தவனாக நல்லவர்களின் இதயத்தாமரைகளில் வீற்றுள்ளான். மிகவும் சிறிய இடமான அதில் அமர்ந்ததால் அவனுக்கு ச்ரமம் உண்டாகிறது. இந்தக் களைப்பு நீங்க, ஸ்ரீரங்கநாதன் தனது பிராட்டியுடன் கூடியவனாக சந்த்ரபுஷ்கரிணியில் ஜலக்ரீடை செய்கிறான். அந்த விளையாட்டிற்கு அங்குள்ள மலர்களில் சில குடை போன்று உள்ளன, சில மலர்கள் அலங்கரித்துக் கொள்ள உதவுகின்றன, சில மலர்கள் மலர்–மாற்றம் என்ற விளையாட்டிற்கு உதவுகின்றன. சில மலர்கள் மலர்யுத்தம் செய்வதற்கு உதவுகின்றன. இப்படிப்பட்ட நெய்தல் மலர்கள் பல உள்ளது, அரங்கனின் களைப்பைத் தீர்க்கவும் வல்லதான சந்த்ரபுஷ்கரிணியை அடைகிறோம்.

40. தாபத்ரயீம் ஐந்தவ புஷ்கரிண்யாம் நிமஜ்ஜ்ய
நிர்வாபயிதாஸ்மி யஸ்யா:
அப்யாஸத: அபாம் அகமர்ஷணீநாம்
சந்த்ரஸ் ஸுதாதீதிதாம் அவாப

பொருள் – சந்த்ரன் தன்னுடைய க்ஷயரோகம் நீங்க எந்த ஒரு வழியும் காணாமல், அனைத்துப் பாவங்களையும் ஒழிக்கவல்ல இந்தச் சந்த்ர புஷ்கரிணியில் நீராடினான். அதன் மூலமாக அம்ருதம் போன்று மாறாத குளிர்ச்சியான கிரணங்களைப் பெற்றான். இப்படிப்பட்ட சந்த்ர புஷ்கரிணியில் நானும் நீராடி, அதன் மூலம் எனது தாபத்ரய வேதனைகளைப் போக்கிக் கொள்வேன்.

ஸ்ரீபராசரபட்டர் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 4)

## அதிகரணம் – 3– அநிஷ்டாதிகார்ய அதிகரணம்

(இந்த அதிகரணத்தில், பாவம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் செல்வதில்லை என்பது நிருபிக்கப்பட்ட உள்ளது).

### 3–1–12 அநிஷ்டாதிகாரிணாம் அபி ச ச்ருதம்

பொருள் – பாவம் செய்தவர்களுக்கும் (யாகம் போன்றவற்றைச் செய்யாதவர்கள்) சந்த்ரமண்டலம் அடைவது கூறப்பட்டது.

பாஷ்யம் – யாகங்கள் (இஷ்டம்), குளம் வெட்டுதல் போன்ற செயல்கள் (பூர்த்தம்), தானம் (தத்தம்) ஆகியவற்றைச் செய்பவர்கள், சந்த்ர மண்டலம் செல்வதாகக் கடந்த அதிகரணம் கூறியது. மேலும் அவர்கள் எஞ்சிய பலன்களுடன் திரும்புவதாகவும் கூறப்பட்டது.

ஆராயப்படும் விஷயம் – பாவம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் செல்கின்றனரா இல்லையா? இவர்கள் யார் என்றால் – சாஸ்த்ரங்களில் கூறப்பட்டதைச் செய்யாமல் இருப்பவர்கள், சாஸ்த்ரங்களில் ஒதுக்கப்பட்டதை விரும்பிச் செய்பவர்கள் ஆவர். இவர்கள் அநிஷ்டாதிகாரிகள் ஆவர்.

பூர்வபக்ஷம் – இவர்களும் சந்த்ரமண்டலம் செல்கின்றனர். எப்படி? இவர்களும் சந்த்ரமண்டலம் செல்வதை, எந்தவிதமான வேறுபாடுகளும் இன்றி ஸ்ருதி கூறுவதால் ஆகும். இதனை கௌஷீதகீ உபநிஷத் (1–2) – யே வை கே ச அஸ்மாத் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸம் ஏவ தே ஸர்வே கச்சந்தி – இந்த உலகில் இருந்து புறப்படுபவர்கள் அனைவரும் சந்த்ரமண்டலம் செல்கின்றனர் – என்று கூறியது.

ஸித்தாந்தம் (கேள்வியாக எழுப்பப்படுகிறது) – நீங்கள் கூறுவது போன்று அனைவரும் சந்த்ரமண்டலம் செல்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்படி என்றால் புண்ணியம் செய்தவர்களும், பாவம் செய்தவர்களும் சந்த்ரலோகம் செல்லும் வழி ஒன்றே என ஆகிவிடும் அல்லவா?

பூர்வபக்ஷம் – அப்படி அல்ல. அடுத்த சூத்திரம் காண்க (அடுத்த நான்கு சூத்திரங்கள் பூர்வபக்ஷிகள் கூறும் சூத்திரங்களாக உள்ளன).

### 3–1–13 ஸம்யமநே து அநுபூய இதரேஷாம் ஆரோஹ அவரோஹ தத்கதி தர்சநாத்

பொருள் – மற்றவர்களுக்கு (பாவம் செய்தவர்களுக்கு) சந்த்ரமண்டலம் செல்வதும், பின்னர் அங்கிருந்து மீள்வதும், யமலோகத்தை அடைந்து, அனுபவித்த பின்னரே ஆகும்.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தின் இறுதியில் பூர்வபக்ஷி கூறியது தொடர்கிறது) – சூத்திரத்தில் உள்ள து என்ற பதம் கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள ஸித்தாந்தவாதியின் சந்தேகத்தை நீக்குகிறது. பாவம் செய்தவர்களுக்கும் சந்த்ரமண்டலத்திற்குச் செல்வதும், மீண்டும் இறங்குவதும் ஏற்படவே செய்கிறது. ஆனால் இச்செயல்கள், யமனின் ஆணைக்கு ஏற்ப, தண்டனைகளை அனுபவித்த

பின்னரே நிகழ்கிறது, அதற்கு வேறு விதமாக அல்ல. இதனை எவ்விதம் அறிவது? அவ்விதமாகவே இவர்கள் செல்கிறார்கள் என்பதை ஸ்ருதி கூறுகிறது. பாவம் செய்தவர்கள் யமனுக்கு வசப்பட்டவர்களாக, யமனிடம் செல்கிறார்கள் என்று கீழே உள்ள வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்:

* கட உபனிஷத் (2–6) – அயம் லோகோ நாஸ்தி பர இதி மாநீ புந: புந: வசமாபத்யதே மே – இந்த உலகம் மட்டுமே உள்ளது, பரலோகம் என்பது இல்லை என்று எண்ணுபவன், மீண்டும் மீண்டும் எனக்கு (யமன்) வசப்பட்டு, என்னிடம் வருகிறான்.

* தைத்ரீய ஆரண்யகம் (2–1) – வைவஸ்வதம் ஸம்யமநம் ஜநாநாம் யமம் ராஜானம் – சூரியனின் புத்திரனான யமனை, ஜனங்கள் சென்று சேரும் இடமாக உள்ள அவனை.

### 3–1–14 ஸ்மரந்தி ச

பொருள் – இதனை (சுத்திரம் 3–1–13 ல் கூறப்பட்டதை) ஸ்ம்ருதிகளிலும் காணமுடியும்.

பாஷ்யம் – (பூர்வபக்ஷி தொடர்ந்து கூறுவது) பராசரர் போன்ற மஹரிஷிகள், அனைவரும் யமனின் வசம் அகப்படுகின்றனர் என்று ஸ்ம்ருதிகளின் மூலமாகக் கூறுகின்றனர். உதாரணமாக விஷ்ணு புராணம் (3–7–5) – ஸர்வே சைதே வசம் யாந்தி யமஸ்ய பகவந் கில – பகவானே. இவர்கள் அனைவரும் யமனின் கட்டுப்பாட்டில் அகப்படுகின்றனர் அல்லவா – என்று கூறியது.

### 3–1–15 அபி ஸப்த

பொருள் – எழு நரகங்கள் பற்றிக் கூறப்படுவதாலும் ஆகும்.

பாஷ்யம் – (பூர்வபக்ஷியின் வாதம் தொடர்கிறது) – பாவம் செய்தவர்கள் செல்லத்தகுந்ததான ரௌரவம் உள்ளிட்ட எழு நரகங்கள் (ரௌரவம், மஹாரௌரவம், தபநம், அவீசி, ஸம்ஹாரம், காலசூத்ரம் மற்றும் கும்பீபாகம்) ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டது.

ஸித்தாந்தம் – நீங்கள் (பூர்வபக்ஷியை நோக்கி) கூறுவது போன்று எழு நரகங்களுக்குச் செல்பவர்கள், யமனிடம் செல்வதாக எவ்விதம் கூற இயலும்?

பூர்வபக்ஷம் – அடுத்த சூத்திரத்தில் பதில் உள்ளது.

### 3–1–16 தத்ர அபி தத்வ்யாபாராத் அவிரோத:

பொருள் – யமனின் ஆணைக்கு உட்பட்டே (நரகங்கள்) உள்ளதால், எந்த விரோதமும் இல்லை.

பாஷ்யம் (பூர்வபக்ஷி தொடர்வது – கடந்த சூத்திரத்தின் இறுதியில் எழுப்பப்பட்ட கேள்வியான எழு நரகங்களுக்குச் செல்பவர்கள் யமனிடம் செல்வதாக எவ்விதம் கூற இயலும் என்பதற்குப் பதில் தரப்படுகிறது) – இதில் எந்த முரண்பாடும் இல்லை. அந்த நரகங்கள் அனைத்தும் யமனின் கட்டளைக்கு அடிபணிந்தே உள்ளன. ஆகவே பாவம் செய்தவர்கள் முதலில் யமலோகத்தை அடைந்து, அங்கு தங்கள் கர்மபலனை அனுபவித்து விட்டு, பின்னர் சந்த்ரமண்டலம் செல்கின்றனர் என்று கொள்ளவேண்டும்.

### 3–1–17 வித்யாகர்மணோ: இதி து ப்ரக்ருதத்வாத்

பொருள் – ப்ரஹ்மவித்யை உள்ளவர்களுக்கு அர்ச்சிராதியும், கர்மங்களை சரிவர இயற்றி வருபவர்களுக்கு தூமாதி மார்க்கமும் கிட்டும் என்றே படிக்கப்படுகிறது.

ஸித்தாந்தம் – (சூத்திரம் 3–1–12 முதல் 3–1–16 வர உள்ள பூர்வபக்ஷங்களுக்கு உரிய ஸித்தாந்தமாகும்) – சூத்திரத்தில் உள்ள து என்ற பதம், பூர்வபக்ஷ வாதங்களைத் தள்ளுகிறது. அவர்கள் கூறியபடி – பாவம் செய்தவர்களும் சந்த்ரமண்டலம் அடைகின்றனர் என்பது ஏற்க இயலாது. ஏன்? உபாஸனம் மற்றும் யஜ்ஞம் ஆகியவற்றைக் கடைபிடித்தவர்களுக்கு மட்டுமே, அதற்கான பலனை அனுபவிக்கும் பொருட்டு, அர்ச்சிராதி மற்றும் தூமாதி மார்கங்கள் கூறப்பட்டன.

இங்கு ஓர் ஐயம் ஏற்படும் – பாவம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் போகின்றனரா, இல்லையா என்பது பற்றி ஆராயும்போது, ஏன் உபாஸனம், யஜ்ஞம் போன்றவற்றைக் கூறினார்? இவற்றை உதாரணத்திற்காகக் கூறுகிறார். இதன் மூலம் கூறப்படுவது – உபாஸனம் (வித்யை) செய்யப்படாத காரணத்தால் பாவம் செய்தவர்களுக்கு தேவயானம் (அர்ச்சிராதி) எப்படிக் கிட்டாதோ அது போன்று, யாகம் முதலியவற்றை இயற்றாதவர்களுக்கு தூமாதி மார்க்கமும் கிட்டாது. உபாஸனம் செய்பவர்கள் அர்ச்சிராதி மார்க்கமாகவும், யஜ்ஞம் முதலியவற்றை இயற்றியவர்கள் தூமாதி மார்க்கமாகவும் செல்வது எவ்விதம் அறியப்பட்டது? தேவயானத்தைப் பற்றிக் கூறும்போது வித்யை (உபாஸனம்) பற்றியும், பித்ரு மார்க்கத்தைப் பற்றிக் கூறும்போது கர்மத்தையும் கூறுவதால் இவ்விதம் அறியலாம்.

உதாரணமாக தேவயானம் பற்றிக் கூறும்போது சாந்தோக்ய உபநிஷத் (5–10–1) – தத்ய இத்தம் விது: யே ச இமே அரண்யே ச்ரத்தா தப இதி உபாஸ்யதே – யார் (ப்ரஹ்மரூபமாக) ஆத்மாவை உபாஸிக்கிறார்களோ, யார் காட்டில் இருந்தபடி தபஸ் என்ற பரம்பொருளை உபாஸிக்கிறார்களோ – என்று கூறத் தொடங்கியது. இதனை முடிக்கும்போது – தே அர்ச்சிஷம் அபி ஸம்பவந்தி அர்ச்சிஷ: அஹ – அவர்கள் அக்னியை அடைந்து, அர்ச்சிராதி மார்க்கமாக பகல்தேவதையை அடைகின்றனர் – என்று கூறியது. பித்ருயானம் பற்றிக் கூறும்போது சாந்தோக்ய உபநிஷத் (5–10–3) – அத யே இமே க்ராம இஷ்டாபூர்த்தே தத்தம் இதி உபாஸதே – கிராமங்களில் இருந்துகொண்டு புண்ணிய செயல்களைச் செய்பவர்கள் (குளம் வெட்டுதல், யாகம் இயற்றுதல் போன்றவை) – என்று கூறத் தொடங்கியது. இதனை முடிக்கும்போது – தே தூமம் அபி ஸம்பவந்தி – அவர்களுக்குத் தூமாதி மார்க்கம் கிட்டுகிறது – என்று முடித்தது.

ஆகவே கௌஷீதகி உபநிஷத் (1–2) – யே வை கே சாஸ்மால் லோகாத் ப்ரயந்தி சந்த்ரமஸம் ஏவ தே ஸர்வே கச்சந்தி – இந்த உலகில் இருந்து கிளம்பும் புண்ணிய அதிகாரிகள் அனைவரும், சந்த்ரமண்டலம் செல்கின்றனர் – என்று தெளிவாகக் கூறியது.

பூர்வபக்ஷம் – சாந்தோக்ய உபநிஷத் (5–9–1) – பஞ்சம்யாம் ஆஹுதௌ ஆப: புருஷவசஸ: பவந்தி – பெண்ணிடம் விடப்படும் விந்து என்ற நீர் ஐந்தாவது ஆஹுதியாகி, அதுவே மனிதனாகிறது – என்று கூறியது. பாவங்கள் செய்தவர்களோ சந்த்ரமண்டலம் செல்லவில்லை என்றால், இந்த ஐந்தாவது ஆஹுதி எற்படாமல், அவர்களுக்கு உடல் தோன்றுவதே இல்லாமல் போய்விடும் அல்லவோ? காரணம், இத்தகைய ஐந்தாவது ஆஹுதி என்பது சந்த்ரமண்டலத்தில் விடப்படுவதாக அல்லாவோ கூறப்பட்டது? ஆகவே பாவம் செய்தவர்களுக்கு உடல் ஏற்படுவதற்காக, அவர்களும் சந்த்ரனை அடைவதும் திரும்புவதும் ஒப்புக் கொள்ளப்படவேண்டும்.

ஸித்தாந்தம் – இதற்கான சமாதானத்தை அடுத்த சூத்திரம் கூறுகிறது.

3–1–18 ந த்ருதீயே ததா உபலப்தே:

பொருள் – மூன்றாவது இடமாகிய நரகம் என்பதற்குச் செல்லும் பாவம் செய்தவர்கள் பொருட்டு ஐந்தாவது ஆஹுதி அவசியம் இல்லை. இவ்விதமே ஸ்ருதி கூறுகிறது.

பாஷ்யம் – (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ல பூர்வபக்ஷத்திற்கான பதில்) – மூன்றாவது இடமாகிய நரகம் அடைந்தவர்கள், மீண்டும் உடல் பெற, ஐந்தாவது ஆஹுதி அவசியம் இல்லை . எப்படி? த்ருதீய என்ற பதம் மூலம் பாவங்கள் மட்டுமே செய்தவர்கள் கூறப்பட்டனர் (ஸ்வர்க்கம் என்ற த்யுலோகம், ப்ரஹ்மலோகம் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்ட மூன்றாவது இடம்). இவர்களுக்கு ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உடல் ஏற்படுவதாக ஸ்ருதி கூறுகிறது. சாந்தோக்ய உபனிஷத் (5–3–3) – வேத்த யதா கோஸௌ லோக: ந ஸம்பூர்யதே – அந்த உலகம் முழுவதுமாக ஏன் நிரம்பாமல் உள்ளது என்று அறிவாயா? – என்று கேள்வி எழும்பியது. இதற்கு விடையாக (5–10–8) – அத ஏதயோ: பதோ: ந கதரேண ச தாநி இமாநி க்ஷுத்ராணி அஸக்ருதாவர்த்தீநி பூதாநி பவந்தி ஜாயஸ்வ ம்ரியஸ்வேதி ஏதத் த்ருதீயம் ஸ்தானம் தேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே – எந்த ஜீவராசிகள் மேலே கூறப்பட்ட அர்ச்சிராதி, தூமாதி மார்க்கங்களில் செல்லாமல் உள்ளனவோ, அவை இந்த உலகிலேயே தாழ்ந்த பிறவி எடுத்து (ஈ, கொசு போன்று), மீண்டும் மீண்டும் பிறவி எடுத்தபடி இங்கேயே உள்ளன. இதுவே மூன்றாவது இடம் ஆகும். இதனால்தான் அந்த உலகம் நிரம்பாமல் உள்ளது – என்று கூறப்பட்டது.

இதன் மூலம் பாவம் செய்தவர்கள் த்ருதீய (மூன்றாவது) என்ற பதம் மூலம் உணர்த்தப்படுகின்றனர். இவர்கள் ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே அடுத்த உடல் எடுக்கின்றனர் என்பது உணர்த்தப்பட்டது. பஞ்சமாஹுதி என்பதன் மூலம் – ஐந்தாவது ஆஹுதியும் உடல் ஏற்பட ஒரு காரணம் என்பதே உணர்த்தப்பட்டது. இந்தக் கருத்தின் மூலம், உடல் உண்டாக ஐந்தாவது ஆஹுதி இல்லாமல் வேறு எந்தக் காரணமும் இல்லை என்று கூறப்படவில்லை. அந்த வரியில் ஏவ (மட்டும்) என்ற பதம் காணப்படவில்லை அல்லவா?

3–1–19 ஸ்மர்யதே அபு ச லோகே

பொருள் – இந்த உலகில் சிலர் இவ்விதம் உள்ளனர் (ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உடல் எடுத்தவர்கள்) என்று ஸ்ம்ருதியும் கூறுகிறது.

பாஷ்யம் – த்ரௌபதி, த்ருஷ்டத்யும்னன் போன்ற புண்ணியம் செய்தவர்களுக்கு (இவர்கள் அக்னியில் இருந்து வெளிப்பட்டவர்கள்), ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உடல் உள்ளது. இதனை மஹாபாரதம் போன்ற ஸ்ம்ருதிகள் கூறுகின்றன.

3–1–20 தர்சநாத் ச

பொருள் – இதே கருத்தை ஸ்ருதியிலும் காணலாம்.

பாஷ்யம் – ஐந்தாவது ஆஹுதி இல்லாமல் உடல் ஏற்படுவதை ஸ்ருதி வரிகள் மூலமாகவும் காணலாம். சாந்தோக்ய உபனிஷத் (6–3–1) – தேஷாம் கல்வேதேஷாம் பூதாநாம் த்ரீண்யேவ பீஜாநி பவந்தி ஆண்டஜம் ஜீவஜம் உத்பிஜ்ஜம் – முட்டைகளில் இருந்து பிறப்பவை, கர்ப்பம் மூலம் பிறப்பவை, பூமியைப் பிளந்து பிறப்பவை ஆகியவற்றுக்கு தேஜஸ் (உஷ்ணம் மூலம் முட்டை உடைந்து உயிர் பிறக்கிறது), நீர் (ரேதஸ் அல்லது விந்து மூலம் ஏற்பட்ட கர்ப்பம்) மற்றும் பூமி (செடிகள் பூமியைப் பிளந்து பிறக்கின்றன) ஆகிய மூன்று பூதங்கள் காரணமாக உள்ளது – என்று கூறியது. இதன் மூலம், பூமியைப் பிளந்து கொண்டு தோன்றும் மரம் போன்றவற்றுக்கும், வியர்வை மூலம் தோன்றும் கிருமிகள் போன்றவற்றுக்கும், ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உடல் ஏற்படுவது உணர்த்தப்பட்டது அல்லவோ?

பூர்வபக்ஷம் – கடந்த உபனிஷத் வரியில் மூன்று பிறவிகள் மட்டுமே கூறப்பட்டன. நீங்கள் கூறிய வியர்வை மூலம் தோன்றுபவை பற்றி ஏதும் கூறப்படவில்லையே.

ஸித்தாந்தம் – அடுத்த சூத்திரம் பதில் தருகிறது.

3–1–21 த்ருதீய சப்தாவரோத: ஸம்சோகஜஸ்ய

பொருள் – மூன்றாவதாக உள்ள பதம் மூலம் (கடந்த சூத்திரத்தில் உள்ள உபனிஷத் வரியில் காணப்படும் உத்பிஜ்ஜம் என்ற பதம்) வியர்வையில் தோன்றுபவையும் கூறப்பட்டது.

ஸித்தாந்தம் – (கடந்த சூத்திரத்தில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) – சாந்தோக்ய உபனிஷத் (6–3–1) – அண்டஜம் ஜீவஜம் உத்பிஜ்ஜம் – என்பதில் மூன்றாவது பதமான உத்பிஜ்ஜம் என்ற பதம் மூலம், வெப்பத்தாலும் வியர்வையாலும் உண்டாகும் கிருமிகள் பற்றிக் கூறப்பட்டது. இதன் மூலமாக, பாவம் செய்தவர்கள் சந்த்ரமண்டலம் அடைவது என்பது பொருந்தாது.

தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ வேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்
(பகுதி – 4)

## அத்யாயம் – 3 ப்ரதாந ப்ரதிதந்த்ர அதிகாரம்

(விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ஆழ்பொருளை விளக்குதல்)

ஆதேயத்வ ப்ரப்ருதி நியமை: ஆதிகர்த்து: சரீரம்
ஸத்தா ஸ்தேம ப்ரயதந பலேஷு ஏதத் ஆயத்தம் ஏதத்
விச்வம் பச்யந் இதி பகவதி வ்யாபக ஆதர்சா த்ருஷ்டே
கம்பீராணாம் அக்ருத ககிராம் காஹதே சித்தவ்ருத்தம்

பொருள் – வ்யாபக மந்த்ரம்(இவை முன்றாகும் – முதலாவது அஷ்டாக்ஷரம், இரண்டாவது ஷடாக்ஷரம் – ஓம் நமோ விஷ்ணவே, மூன்றாவது – த்வாதசாக்ஷரம் – ஓம் நமோ பகவதே வாஸுதேவாய) என்னும் கண்ணாடி மூலம் பகவானைக் காணும்போது, அது அவன் எங்கும் பரவி உள்ளதைக் காண்பிக்கிறது. மேலும் இந்த உலகம் முழுவதும் அவனையே சார்ந்து உள்ளதையும், அவனாலேயே நீடித்திருப்பதையும், தனது செயல்களுக்கும் செயல்களின் பலன்களுக்கும் அவனையே அண்டியுள்ளதையும் காணமுடியும். இந்த உலகம் அவனது லீலைக்காகவே உள்ளதாலும், அவனால் நியமிக்கப்பட்டு வருவதாலும், அவனது உடலாகவே(சரீரம்) இந்த உலகம் உள்ளது என்று அறியலாம். இவ்விதம் இந்த உலகம் அவனது உடலாக உள்ளது என்ற உண்மையை அறியும் ஒருவன், யாராலும் உருவாக்கப்படாத ஸ்ருதிகளை முழுவதுமாக அறிந்தவன் ஆகிறான்.

ப்ரதிதந்த்ரமாவது – மற்றுள்ள ஸித்தாந்திகள் ஒருவரும் இசையாதே தன்னுடைய ஸித்தாந்தத்துக்கே அஸாதாரணமான அர்த்தம். இங்கு வேதாந்திகளான நம்முடைய தர்சனத்துக்கே அஸாதாரணமுமாய் ப்ரதானமுமான அர்த்தம் ஏதென்னில், சேதநாசேதநங்களுக்கும் ஈச்வரனுக்குமுண்டான சரீராத்மபாவ–ஸம்பந்தாதிகள்.

விளக்கம் – ப்ரதிதந்த்ரம் என்றால், மற்றவர்களின் ஸித்தாந்தங்களில் காணப்படாதது, ஒரு குறிப்பிட்ட ஸித்தாந்தத்தில் மட்டுமே காணப்படுவது என்று பொருள். வேதாந்தவாதிகளான நமது ஸித்தாந்தத்திற்கு உள்ள தனித்தன்மை எது? இந்தத் தன்மை, சேதன–அசேதனங்களுக்கும் ஸர்வேச்வரனுக்கும் இடையே உள்ள சரீர–ஆத்ம தொடர்பு ஆகும்.

### சரீரம் என்றால் என்ன, சரீரீ என்றால் என்ன

இதில் ஈச்வரனுக்கு சரீரத்வமாவது – சேதநாசேதந த்ரவ்யங்களைப் பற்ற நியமேந தாரகனுமாய், நியந்தாவுமாய், சேஷியாயுமிருக்கை. சேதநாசேதநங்களுக்கு

சரீரத்வமாவது – நியமேந ஈச்வரனைப் பற்ற தார்யமுமாய், நியாம்யமுமாய், சேஷமுமான த்ரவ்யமாய் இருக்கை.

விளக்கம் – ஈச்வரனே சரீரீ(ஆத்மா எனப்படுகிறான்). இவ்விதம் கூறும் காரணம் என்ன? சேதன–அசேதனங்கள்(த்ரவ்யம்) உள்ளவரையில் அவற்றைத் தாங்குபவனாகவும்(தாரகன்), அவைகளை நியமிப்பவனாகவும், அவற்றின் எஜமானனாகவும் இவனே உள்ளான். சேதன–அசேதனங்கள் அவனுடைய உடலாக இருக்கும் காரணம் என்ன? அவனால் தாங்கப்பட்டு உள்ளன, அவனால் நியமிக்கப்பட்டு உள்ளன, தங்கள் வாழ்நாள் முழுவதும் எஜமானனாகிய அவனுக்காகவே உள்ளன.

சேதநாசேதநங்களைப் பற்ற தாரகனுமாய், நியந்தாவுமாகையாவது – தன் ஸ்வரூபத்தாலும் ஸங்கல்பத்தாலும் யதார்ஹே ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரயோஜகனாயிருக்கை. அது எங்ஙனேயென்னில் – ஈச்வரன் தன் ஸ்வரூப நிரூபக தர்மங்களுக்கும் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களான குணங்களுக்கும் போலே ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த த்ரவ்யகளுக்கும் அவ்யவஹிதமாக ஸ்வரூபேண ஆதாரமாயிருக்கும். அவ்வோ த்ரவ்யங்களை ஆச்ரயித்திருக்கும் குணாதிகளுக்கு அவ்வோ த்ரவ்யத்வார ஆதாரமாயிருக்கும். ஜீவர்களாலே தரிக்கப்படுகிற சரீரங்களுக்கு ஜீவத்வாரா ஆதாரமாயிருக்கும் என்று சிலர் சொல்லுவார்கள். ஜீவனை த்வாரமாகக் கொண்டும் ஸ்வரூபத்தாலும் ஆதாரமாயிருக்கும் என்று சில ஆசார்யர்கள் சொல்லுவார்கள். இப்படி ஸர்வமும் ஈச்வர ஸ்வரூபத்தைப் பற்ற அப்ருதக்ஸித்த விசேஷணமாகையாலே இவற்றின் ஸத்தாதிகள் ஆச்ரய–ஸத்தாதீனங்கள்.

விளக்கம் – ஈச்வரனுடைய ஸ்வரூபத்தாலும், ஸங்கல்பத்தாலும் மட்டுமே சேதனங்களும் அசேதனங்களும் இந்த உலகில் இருந்து தங்கள் செயல்களைச் செய்தபடி உள்ளன. ஆகவே ஈச்வரன் இவற்றைத் தாங்குபவனாகவும், நியமிப்பவனாகவும் கூறப்படுகிறான். இது எப்படி என்ற கேள்வி எழலாம். தனது ஸ்வரூபத்தை விளக்கவல்லதான தனது கல்யாணகுணங்கள் அனைத்தையும் ஈச்வரன் எவ்விதம் தாங்கியுள்ளானோ(அந்தக் குணங்களுக்கு ஆதாரமாக உள்ளானோ), அது போன்று, தன்னைக் காட்டிலும் வேறாக உள்ளதும், தன்னிடமிருந்து பிரிக்க இயலாததும் ஆகிய சேதன–அசேதனங்களைத் தாங்கியபடி உள்ளான். அவற்றின் தன்மைகளுக்கும் இவனே ஆதாரமாக உள்ளான். ஒரு சிலர் – ஜீவன் மூலமாகவே ஈச்வரன் அனைத்தையும் தாங்கியுள்ளான் – என்று கூறுவார்கள். ஒரு சிலர் – தனது ஸ்வரூபம் மூலம் நேரடியாகவும், ஜீவன் மூலம் மறைமுகமாகவும் ஈச்வரன் அனைத்தையும் தாங்கியுள்ளான் – என்பர். சேதன–அசேதனங்களுடன் கூடியவனாக ஈச்வரன் உள்ளான் (அப்ருதக்ஸித்த விசேஷணம்) என்பதால், அவனிடமிருந்து அவற்றைப் பிரிக்க இயலாது. எனவே அவற்றின் இருப்பு என்று கூறும் நிலையே அவற்றைத் தாங்கும் அவனைச் சார்ந்தே உள்ளது.

ஸர்வ வஸ்துக்களுடையவும் ஸத்தை ஸங்கல்பாதீநையாகையாவது – அநித்யங்கள் அநித்யேச்சையாலே உத்பந்நங்களாயும், நித்யங்கள் நித்யேச்சாஸித்தங்களாயுமிருக்கை. இவ்வர்த்தத்தை இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா என்கிற சுலோகத்தாலே அபியுக்தர் விவேகித்தார்கள். இத்தாலே ஸர்வத்தினுடையவும் ஸத்தானுவ்ருத்திரூபையான ஸ்திதியும் ஈச்வரேச்சாதீநையானபடியாலே சர்வமும் ஈச்வர ஸங்கல்பாஸ்ரீதம் என்று சொல்லுகிறது.

விளக்கம் – சேதன–அசேதனங்கள் இருப்பது என்பதே அவனது ஸங்கல்பத்தினால் ஆகும். ஒரு சிலர் ஒரு சில காலகட்டத்தில் மட்டுமே இருப்பது என்பது அவனுக்கு அவ்வப்போது உண்டாகும் ஸங்கல்பத்தினாலும், எப்போதும் இருந்து வரும் பொருள்கள் அனைத்தும் அவனது நித்யமான ஸங்கல்பத்தினாலும் உள்ளன. இதனை, அனைத்தும் அறிந்த அறிவாளிகள், ஸ்ரீவைகுண்டஸ்தவம்(36) கூறும் – இச்சாத ஏவ தவ விச்வபதார்த்தஸத்தா – உனது ஸங்கல்பத்தினால் மட்டுமே அனைத்தும் உள்ளன – என்ற வரி மூலமாக அறிகின்றனர். ஆக ஒரு பொருள் தொடர்ந்து இருக்கை என்பது ஈச்வரனின் ஸங்கல்பத்தாலேயே ஆகும், எனவே அனைத்தும் ஈச்வரனின் ஸங்கல்பத்தைச் சார்ந்தே உள்ளன என்றாகிறது.

குருத்ரவ்யங்கள் ஸங்கல்பத்தாலே த்ருதங்கள் என்று சாஸ்த்ரங்களில் சொல்லுமது

த்யைஸ்ஸ சந்த்ரார்கநக்ஷத்ரம் கம் திசோ பூர்மஹோததி:
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதானி மஹாத்மன:

என்கிறபடியே ஓரொரு தேச விசேஷங்களிலே விழாதபடி நிறுத்துகையைப்பற்ற.

விளக்கம் – கனமான பொருள்கள் ஈச்வரனின் ஸங்கல்பத்தினால் தாங்கப்பட்டே உள்ளன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. உதாரணமாக மஹாபாரதம் – த்யைஸ்ஸ சந்த்ரார்கநக்ஷத்ரம் கம் திசோ பூர்மஹோததி: வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதானி மஹாத்மன: – ஸ்வர்க்கம், சந்த்ரன்–சூரியன்–நக்ஷத்ரங்கள் ஆகியவற்றுடன் உள்ள ஆகாயம், திசைகள், பூமி, பல பெரிய ஸமுத்ரங்கள் ஆகிய அனைத்தும் பரமாத்மாவான வாஸுதேவனின் ஸங்கல்பத்தால் தாங்கப்பட்டு உள்ளன – என்று கூறியது. இதன் மூலம் இது போன்ற பெரிய வஸ்துக்கள் அவற்றுக்கான இடங்களில் உள்ள நிலையும், அவை அங்கிருந்து நழுவாதபடி உள்ள நிலையும் பகவானின் ஸங்கல்பத்தினாலேயே ஆகும்.

இப்படி இச்சாதீந ஸத்தா ஸ்திதி ப்ரவ்ருத்திகளான வஸ்துக்களுக்குப் பரமாத்ம ஸ்வரூபம் என் செய்கிறது என்னில், பரமாத்மாவினுடைய இச்சை இவ்வஸ்துக்களைப் பரமாத்மாவின் ஸ்வரூபாச்ரிதங்களாக வகுத்து வைக்கும். இப்படி ஸர்வ வஸ்துவும் ஈச்வர ஸ்வரூபா (தீந) ச்ரிதமுமாய் ஈச்வரேச்சா தீநமுமாயிருக்கும்.

விளக்கம் – இவ்விதம் அனைத்தும் அவனது ஸங்கல்பத்தினால் தாங்கப்படுவதற்கு, அவனுடைய ஸ்வரூபம் என்ன செய்கிறது என்ற கேள்வி எழலாம். பகவானுடைய ஸங்கல்பம் என்பதே அனைத்தையும் அவனது ஸ்வரூபத்தினை அண்டியிருக்கும்படிச் செய்கிறது என்று கருத்து. இவ்விதம் அனைத்தும் அவனது ஸ்வரூபத்தையும், ஸங்கல்பத்தையும் அண்டியே உள்ளன.

லோகத்திலும் சரீரம் சரீரியினுடைய ஸ்வரூபாச்ரிதமுமாய் ஸங்கல்பாச்ரிதமுமாய் இருக்கக் காண நின்றோம். ஜீவனிருந்த காலமிருந்து இவன் விட்டபோது அழிகையாலே ஸ்வரூபாச்ரிதம் இவர்தம் ஸங்கல்பமில்லாத ஸுஷுப்த்யாதி அவஸ்தைகளிலே தெளிவது. ஜாகராதி தேசைகளில் ஸங்கல்பத்தாலே விழாதபடி தாங்கும்போது ஸங்கல்பாச்ரிதம் என்னக்கடவது. இதில் ஸ்வரூபாச்ரிதமா யிருக்கிறபடியை ஆதேயத்வமென்றும், ஸங்கல்பாதீநமாயிருக்கிறபடியை நியாம்ய த்வமென்றும் சொல்லுகிறது.

விளக்கம் – இந்த உலகில் நமது உடலானது நமது ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்பவோ அல்லது ஆத்மாவின் ஸங்கல்பத்தினாலோ இயங்குவதைக் காணலாம். இதன் காரணம் – இந்த உடலானது, ஆத்மா உடலுக்குள் புகுவதிலிருந்து அது வெளியேறும்வரை மட்டுமே உள்ளதைக் காண்கிறோம். ஆத்மா வெளியேறியபின் உடல் அழிவதையும் காணலாம். ஆக இந்த உடலானது ஆத்மாவின் ஸ்வரூபத்தாலோ அல்லது ஸங்கல்பத்தாலோ தாங்கப்படுகின்றது. நாம் ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ளபோது, ஆத்மாவின் ஸங்கல்பம் என்பது காணப்படாமல் உள்ளது, ஆனாலும் உடல் அழியாமல் உள்ளது, ஆக இந்த நிலையில் உடலானது ஆத்மாவின் ஸ்வரூபத்தால் தாங்கப்படுகிறது. விழிப்பு நிலையில் இந்த உடல் கீழே விழாதபடி ஆத்மாவின் ஸங்கல்பத்தால் தாங்கப்படுகிறது. இந்த உடல் ஆத்மாவின் ஸ்வரூபத்தால் தாங்கப்படும்போது – உடல் ஆத்மாவால் தாங்கப்படுகிறது (ஆதேயத்வம்) – என்று கூறப்படும். இந்த உடல் ஆத்மாவின் ஸங்கல்பத்தால் தாங்கப்படும்போது – உடல் ஆத்மாவால் நியமிக்கப்படுகிறது(நியாம்யத்வம்) – என்று கூறப்படும்.

## சேஷன் – சேஷி என்பதன் பொருள்

ஈச்வரன் ஸர்வசேஷியாகையாவது

உபாதத்தே ஸத்தா ஸ்திதி நியமந ஆத்யை: சித் அசிதௌ
ஸ்வம் உத்திச்ய ஸ்ரீமாந் இதி வததி வாகௌபநிஷதீ
உபாயோபேயத்வ ததிஹ தவ தத்வம் ந து குணௌ

அதஸ்த்வாம் ஸ்ரீரங்கேசய சரணமவ்யாஜமபஜம்

என்கிறபடியே தன் ப்ரயோஜனத்துக்காகவே பாரார்த்யைகஸ்வபாவங்களான இவற்றை உபாதாநம் பண்ணி இவற்றாலே அதிசயவனாகை.

விளக்கம் – ஈச்வரன் அனைவரின் எஜமானனாக உள்ளான் என்றே கூற வேண்டும் – காரணம் அவனுக்காகவே அனைத்தும் உள்ளன. ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்ரீபராசரபட்டர் இதனைக் கூறுகிறார் – இந்த உலகில் உள்ள அனைத்தையும் உண்டாக்குவது, உண்டாக்கிய அனைத்தியும் நிலை நிறுத்துவது, அவற்றை நியமிப்பது போன்றவற்றைச் செய்வதன் மூலம் ஸ்ரீரங்கநாச்சியாருடன் கூடியவனாக உள்ள ஸ்ரீரங்கநாதன், சேதன–அசேதனங்களைத் தனது ப்ரயோஜனத்திற்காகவே என்று உணர்த்துகிறான், இவ்விதமாகவே உபனிஷத்துக்கள் கூறுகின்றன. ஸ்ரீரங்கநாதா, நீ சேஷியாக (எஜமானன்) உள்ளதால் ஜீவன் அடையவேண்டிய இடமாகவும்(உபேயம்), அவ்விதம் அடையப் பின்பற்ற வேண்டிய மார்க்கமாகவும்(உபாயம்) நீயே உள்ளாய். இது உனது ஸ்வபாவமாகவே உள்ளது, உன்னிடம் ஏதோ ஒரு காலத்தில் வந்து புகுந்த தன்மை அன்று. ஆகவே, ஸ்ரீரங்கத்தில் உறைபவனே, வேறு பயன் கருதாமல் உன்னிடம் சரணம் புகுந்தேன் – என்றார். ஆக, சேதன–அசேதனங்கள் தங்களுக்காக இல்லை, அவனுக்குப் பயன்படுவதற்காகவே உள்ளன. அவற்றின் ஸ்வபாவமே அவனுக்காக இருப்பதாகும். இவ்விதம் அவற்றைத் தனது பயனுக்காகக் கொள்ளும்போது அவனது குணங்கள் ப்ரகாசிக்கின்றன.

## சேஷ–சேஷி ஞானத்தினால் உண்டாகும் பயன்

இந்த ஆதாராதேய பாவாதிகளால் இச்சேதனனுக்கு பலிப்பதென் என்னில் ஆதாராதேய பாவத்தாலே அவனுடைய ஞாநசக்த்யாதிகளுக்குப் போலே அப்ருதக்ஸித்த ஸ்வரூபலாபமும் சேஷ–சேஷிபாவத்தாலே ஆத்மாபிமானானுகுண–புருஷார்த்த–வ்யவஸ்தையின்படியே ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தருசியும், சேஷசேஷிபாவத்தாலும் நியந்த்ரு–நியாம்ய–பாவத்தாலும் ஸ்வரூபானுரூபமான புருஷார்த்தத்துக்கு அனுரூபமாய் நிரபேக்ஷமுமாயிருந்துள்ள உபாய விசேஷத்தை அறிகையும் பலிக்கும். ஆக இவற்றால் இச்சேதனன் அநந்யாதாரன், அநந்யப்ரயோஜனன், அநந்யசரணன் என்றாயிற்று.

விளக்கம் – ஒரு கேள்வி எழலாம். இவ்விதம் அவனால் தாங்கப்பட்டு, அவனால் நியமிக்கப்பட்டு, அவனது ப்ரயோஜனத்திற்காக மட்டுமே வாழ்ந்து வருவதால் சேதனனுக்கு என்ன பயன்? ஈச்வரனைத் தனது ஆதாரமாகக் கொண்டு வாழ்வதால், ஈச்வரனின் ஞானம்–சக்தி போன்ற குணங்கள் அவனை விட்டுப் பிரியாமல் உள்ளது போன்று, ஜீவனும் அவனை விட்டுப் பிரியாத ஸ்வரூபத்தை அடைகிறான். ஈச்வரனின் அடிமையாக உள்ளதாலும், ஈச்வரனைத் தனது எஜமானனாகக் கொள்வதாலும் தான் பெறவேண்டிய புருஷார்த்தம் என்னவென்று அறிகிறான். தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி உள்ள அந்தப் புருஷார்த்தத்தின் மீது அவனுக்கு விருப்பம் (ருசி) பிறக்கிறது, காரணம் எந்த ஒரு பொருளும் தனது ஸ்வபாவத்திற்கு ஏற்ப உள்ள குறிக்கோளை விரும்பும் அல்லவோ? பகவானுக்குத் தான் அடிமையாக இருப்பதாலும், அவனைத் தனது ஆதாரமாகவும் நியமிப்பவனாகவும் கொள்வதாலும், சேதனனுக்குத் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற புருஷார்த்தத்தை அடையும் உபாயமாகவும்–உபேயமாகவும் (உபேயம் = அடையவேண்டிய இலக்கு, உபாயம் = அந்த இலக்கை அடைய உதவும் மார்க்கம்) பகவானே உள்ளான் என்ற ஞானம் ஏற்படுகிறது. இவ்விதம் சேதனனுக்கு உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பதற்கு பகவான் வேறு எதனையும் எதிர்பார்ப்பதில்லை. ஆக, தனது இருப்புக்கு வேறு ஏதும் ஆதாரமாக இல்லாத சேதனன், வேறு எதற்காகவும் வாழாமல், இந்த ஆதாரமாக உள்ள பகவானுக்காகவே இருக்கிறான் என்றாகிறது.

மேலே உள்ள கருத்துக்கள் ரஹஸ்யத்ரயத்தில் உள்ளன என்று காண்பித்தல்

இவ்வர்த்தம் ப்ரதமரஹஸ்யத்தில் கிடக்கிறபடி எங்ஙனேயென்னில் – நாராயண சப்தத்தில், தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸத்வயத்தாலுமுண்டான தாரகத்வ வ்யாபக த்வாதிகளாலே அநந்யாதாரத்வாதி விசிஷ்ட ஸ்வரூபலாபமும், பாரார்த்ய பாரதந்த்ய கர்ப்பமான கீழில் பதத்வயத்தாலே அநந்ய ப்ரயோஜனத்வமும் அநந்ய சரணத்வமும் பலிக்கும். ப்ரபத்த்யனுஷ்டான ப்ரகாசகமான மந்த்ர ரத்னத்தில் பூர்வகண்டத்தாலே

அநந்ய சரணத்வமும், உத்தரகண்டத்தாலே அநந்ய ப்ரயோஜனத்வமும் உபயபாகத்தாலும் அநந்யாதாரத்வமும் ப்ரகாசிக்கிறது. இப்படி சப்தமாகவும் ஆர்த்தமாகவும் சரமச்லோகத்திலும் இவ்வகுப்புக்கண்டு கொள்வது.

விளக்கம் – மேலே கூறப்பட்ட கருத்துக்கள் ரஹஸ்யத்ரயத்தின் முதல் ரஹஸ்யமான திருமந்த்ரத்தில் எவ்விதம் பொதிந்துள்ளது என்ற கேள்வி எழலாம். நாராயாணா என்ற சப்தம் தாரகன் (அனைத்தையும் தாங்குபவன்) என்ற பொருளையும், அனைத்தையும் வ்யாபித்துள்ளவன் என்ற பொருளையும் அளிக்கவல்லதாகும். எப்படி? இதனை நாராயணாம் அயநம் = நரங்களுக்கு இருப்பிடம், அனைத்திற்கும் இருப்பிடம், ஆகவே தாரகன் என்று கொள்ளலாம். அல்லது இதனை நாரா: அயநம் யஸ்ய = நரங்கள் யாருக்கு அயனமோ = யாருக்கு நரங்கள் இருப்பிடமோ, இதன் மூலம் அனைத்திலும் பரவியுள்ளான் என்று கொள்ளலாம். இதன் மூலம் ஜீவன் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ப வேறு யாரையும் ஆதாரமாக உடையவன் அல்லன் என்பதையும், நாராயணனைத் தவிர வேறு யாராலும் வ்யாபிக்கப்படாதவன் (தன்னுள் அந்தர்யாமியாக) என்பதையும் அறியலாம். நாராயணாய என்பதற்கு முன்பாக உள்ள ஓம் என்பதும் நமோ என்பதும் – ஜீவன் நாராயணனுக்காக மட்டுமே உள்ளான் (அநந்ய ப்ரயோஜத்வம்) என்பதையும், ஜீவன் தனது ஆதாரத்திற்கு நாராயணனை மட்டுமே கொண்டுள்ளான் (அநந்ய சரணத்வம்) என்பதையும் விளக்குகின்றன. ஆக இவற்றின் மூலம் ஜீவன் நாராயணனைத் தவிர வேறு யாருடைய பயனுக்காகவும் இல்லை என்பதையும், நாராயணனைத் தவிர ஜீவனுக்கு அடைக்கலம் வேறு யாரும் இல்லை என்பதையும் உணரலாம். ப்ரபத்தியை விளக்குவதும், மந்த்ரரத்னம் எனப்படுவதும் ஆகிய த்வயமந்த்ரத்தின் முதல் பகுதியானது, ஜீவனுக்கு நாராயணனைத் தவிர அடைக்கலம் வேறு யாரும் இல்லை (அநந்ய சரணத்வம்) என்பதைக் கூறுகிறது, அதன் பிற்பகுதி, ஜீவன் நாராயணனுக்காக மட்டுமே உள்ளான், வேறு யாருடைய பயனுக்காகவும் அல்லன் (அநந்ய ப்ரயோஜனத்வம்) என்பதைக் கூறுகிறது. இரண்டு பகுதிகளும் சேர்ந்து ஜீவனுக்கு வேறு ஆதாரம் இல்லை(அநங்யாதாரத்வம்) என்பதை உணர்த்துகிறது. இதே கருத்துக்கள் சரமச்லோகத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் கூறப்பட்டதை உணரலாம்.

## அப்புள்ளார் அருளிச் செய்த உதாரணங்கள்

இப்படி சரமச்லோகத்திலே ஸித்தோபாய வசீகரணார்த்தமாக விஹிதமான ஸாத்யோபாய விசேஷத்தை த்வயத்தாலே அனுஷ்டிக்கும்போதைக்கு அனுஸந்தேயங்களாகக் கொண்டு அவச்யாபேக்ஷிதங்களான அர்த்தங்களை எல்லாம் சிறிய கண்ணாடி பெரிய உருக்களைக் காட்டுமாப்போலே சுருங்கத் தெளிவிக்கும் திருமந்த்ரம். அதில் ப்ரதமபதத்தில் அர்த்தங்களை அர்ஜுன ரதத்திலும், அக்ரத: ப்ரயயௌ ராம: என்கிற ச்லோகத்திலும் கண்டு கொள்வது. த்விதீயபதத்தில் சப்தத்தாலும், அர்த்தஸ்வபாவத்தாலும் வரும் அர்த்தங்களை ஸ்ரீபரதாழ்வானுடையவும் ஸ்ரீசத்ருக்நாழ்வானுடையவும் வ்ருத்தாந்தங்களிலே அறிவது. நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே நீயென்னையன்றியிலை என்னும்படி நிற்கிற நாராயணசப்தார்த்தத்தைக் கோஸலஜனபதத்தில் ஜந்துக்களையும் சக்ரவர்த்தித் திருமகனையும் உதாஹரணமாக்கிக் கண்டு கொள்வது. பூர்வபத த்வயத்தில் தோன்றின காஷ்டாப்ராப்த பாரார்த்ய பாரதந்த்ரியங்கள் பேரணியாகத் த்ருதீய பதத்தில் சதுர்த்தியில் கருத்திலே ப்ரார்த்தநீயமான சேஷியுகந்த கைங்கர்யத்தை இளைய பெருமாளுடையவும் இவருடைய அவதார விசேஷமான திருவடி நிலையாழ்வாருடையவும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளிலே தெளிவது. இது திருமந்த்ர அர்த்தானுஸந்தாநத்துக்கு குறிப்பாக அப்புள்ளார் அருளிச் செய்த விரகு. இதின் படியிலே த்வயத்திலும் சரமச்லோகத்திலும் உள்ள அர்த்தங்கள் தெளிந்து கொள்வது.

விளக்கம் – சரமச்லோகமானது நாம் பகவானைச் சென்றடையும் உபாயமாக (ஸித்தோபாயம்) அவனே உள்ளான் என்றும், நாம் அவனைச் சென்றடைய உதவுவதற்கு அவன் எப்போதும் சித்தமாக உள்ளான் என்றும், அவனது உபாயம் நமக்குக் கிட்டவேண்டும் என்றால் நாம் ஒரு உபாயம் (ஸாத்ய உபாயம்) கைக்கொள்ளவேண்டும் என்றும், இந்த உபாயம் பகவானிடத்தில் சரணாகதியே என்றும் கூறியது. இந்தச் சரணாகதியைச் செய்யும்போது த்வயத்தைக் கூறியபடி இருத்தல் வேண்டும், மேலும் அந்த நேரத்தில் நமது மனதில் என்ன சிந்தனையுடன் இருக்க வேண்டும் என்பதைத் திருமந்த்ரமானது சிறிய கண்ணாடி பெரிய உருவைக் காண்பிப்பது போன்று, நமக்கு உணர்த்துகிறது. திருமந்த்ரத்தின்

முதல் பதமான ஓம் என்பதன் இரு பொருள்களை (அர்த்தம்) அர்ஜுனனின் தேரிலும், இராமாயணத்தின் – அக்ரத: ப்ரயயௌ ராம: – என்ற ச்லோகத்தின் மூலமும் அறியலாம் (இந்த ச்லோகத்தின் பொருள் – கானகத்தில் இராமன் முதலில் சென்றான். அவனைப் பின்தொடர்ந்து சீதை நடுவில் சென்றாள். பின்னால் இலட்சுமணன் கையில் வில்லுடன் சென்றான் – என்பதாகும். இராமன் = அ என்ற எழுத்து, சீதை = உ என்ற எழுத்து, இலட்சுமணன் = ம என்ற எழுத்து. இம்மூன்றும் இணைந்ததே ஓம் என்பதாகும்). அடுத்து திருமந்த்ரத்தின் இரண்டாம் பதமான நம: என்பது – நான் சுதந்த்ரமானவன் அல்லன், நான் பகவானுக்கு முழுவதுமாகக் கட்டுப்பட்டவன் என்ற பொருளை உணர்த்துவதாகும். இதனை பரதன் மற்றும் சத்ருக்னன் மூலமாக உணரலாம் (பரதன் இராமனுக்குத் தொண்டனாக இருந்தான் – பகவத் பாரதந்த்ர்யம், சத்ருக்னன் பரதனுக்குத் தொண்டனாக இருந்தான் – பாகவத பாரதந்த்ர்யம்). அடுத்து நாராயண என்ற பதம் உள்ளது. இந்தப் பதம் – அவன் உயிர்களின் இருப்பிடமாக உள்ளான், உயிர்கள் அவனது இருப்பிடமாக உள்ளன – என்ற இரு பொருளையும் அளிப்பதாகும், இதனை திருமழிசையாழ்வார் நான்முகந்திருவந்தாதியில் (7) – நான் உன்னை அன்றி இலேன் கண்டாய் நாராணனே நீ என்னை அன்றி இலை – என்று கூறினார். இதே கருத்து இராமாயணத்திலும் வெளிப்பட்டது – இராமனைப் பிரிந்த கோஸல நாட்டின் தாவரங்களும் விலங்குகளும் வாடின, இராமன் இந்த உலகை விட்டுப் பிரிந்தபோது அவற்றைப் பிரிய இயலாமல் தன்னுடனே கொண்டு சென்றான் – என்பது காண்க. திருமந்த்ரத்தின் முதல் பதமான ப்ரணவம் – ம எனப்படும் ஜீவன் அ எனப்படும் பகவானுக்காகவே உள்ளான் என்பதைக் குறிக்கும். இரண்டாம் பதமான நம என்பது ஜீவன் பகவானையே சார்ந்துள்ளான் என்பதைக் குறிக்கும். ஜீவன் பகவானுக்காகவும் அவனது அடியார்களுக்காகவுமே உள்ளான், ஜீவன் பகவானையும் அவனது அடியார்களையுமே சார்ந்துள்ளான். இதன் மூலம் நாராயணாய என்ற பதம் ஜீவனின் கைங்கர்யம் என்ற புருஷார்த்தத்தை உணர்த்துகிறது. இந்தக் கைங்கர்ய நிலையானது இலட்சுமணன் விஷயத்தில் நேரடியாகக் காணப்பட்டது. ஆதிசேஷனின் அவதாரமாகவே உள்ள இலட்சுமணனின் அம்சமான பாதுகை, இராமனை விட்டுப் பிரிந்து, அவனது தொண்டனான பரதனுடன் சென்றதன் மூலம் பாகவத கைங்கர்யத்தை உணர்த்தியது. இவை அனைத்தும் திருமந்த்ரத்தின் பொருளை நன்றாக உணர்த்த அப்புள்ளார் அருளிச் செய்த உதாரணங்களாகும். இதுபோன்றே த்வயத்திலும், சரமச்லோகத்திலும் உள்ள பொருள்களை உணர வேண்டும்.

இவற்றில் ஈச்வரனுக்கு ப்ரகாசித்த சேஷித்வம் சேதநாசேதந ஸாதாரண தர்மமாகையாலே சேதநைகாந்தமான ஸ்வாமித்வமாகிற விசேஷத்திலே பர்யவஸிப்பித்து அனுஸந்திக்க ப்ராப்தம். இப்படித் தன்னுடைய சேஷத்வமும் ஸாமான்யமாகையாலே தாஸத்வமாகிற விசேஷத்திலே விச்ரமிப்பித்து அனுஸந்திக்கவேணும். இவற்றில் ஸாமான்யமான சேஷசேஷிபாவம் ப்ரதமாக்ஷரத்தில் சதுர்த்தியாலே ப்ரகாச்யம். இதின் விசேஷமான தாஸத்வ–ஸ்வாமித்வங்கள் இருவரும் சேதனராய்த் தோற்றுகையாலே அர்த்தஸித்தம். இப்படி நாராயண சப்தத்திலும் ஸாமான்யமும் விசேஷமும் கண்டு கொள்வது. இதில் ஸாமான்யமான சேஷத்வத்தாலே சேதனனுக்கு ப்ராப்தமான கிஞ்சித்காரம் தாஸத்வமாகிற விசேஷத்தாலே கைங்கர்ய ரூபமான புருஷார்த்தமாயிற்று. இப்படி சேஷித்வத்தாலே வந்த ஈச்வரனுடைய அதிசய யோகமும் ஸ்வாமித்வமாகிற விசேஷத்தாலே அவனுக்குப் புருஷார்த்தமாய்ப் பலிக்கிறது. சேதனருடைய ரக்ஷணத்தில் ஈச்வரன் ப்ராப்தனுமாய் சக்தனுமாய், தததீந ப்ரவ்ருத்தியை ஒழியச் சேதனர் அப்ராப்தமாய் அசக்தருமாயிருக்கைக்கு நிபந்தனம் – ஈச்வரனுடைய நிரூபாதிக சேஷித்வமும் நிரூபாதிக நியாம்யத்வமும், உடையவன் உடைமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்த்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிறே. ரக்ஷிக்கும்போது கர்மவச்யரை ஒருபாயத்திலே மூட்டி ரக்ஷிக்கை ஈச்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்.

விளக்கம் – இந்த மூன்று மந்த்ரங்களிலும் ஈச்வரன் அனைத்திற்கும் எஜமானனாக உள்ளான் என்பதும், இவனுக்காகவே அனைத்தும் உள்ளன என்பதும் கூறப்படுகின்றன. அவன் சேதனம்–அசேதனம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான எஜமானனாகவே உள்ளான். அசேதனங்களைப் பொறுத்தவரையில், அவை இவனுக்காகவே உள்ளதால், அவற்றின் எஜமானனாக இவன் உள்ளான். ஞானத்துடன் கூடிய சேதனங்களைப் பொறுத்தவரையில், சேதனங்கள் அனைத்தும் அவனுக்குக் கைங்கர்யம் செய்தபடி இருக்கவேண்டிய ஸ்வாமியாக உள்ளான். இந்த மூன்று மந்த்ரங்களையும் நாம் கூறும்போது இந்தக் கருத்துக்களை நினைவில்

நிறுத்த வேண்டும். நாம் அவனுக்கு அடிமை என்ற நிலையில் அசேதனங்களுக்கு ஒக்க இருந்தபோதிலும், அவனுடைய தாஸர்கள் என்ற சிறப்புத் தகுதி சேதனர்களான நமக்கு உள்ளது. ஜீவனுக்கும் பகவானுக்கும் இடையே உள்ள சேஷ-சேஷித்வ உறவுமுறையானது திருமந்த்ரத்தின் முதல் பதம் மூலம் உணர்த்தப்படுகிறது. ஆனால் சேதனர்களுக்கு மட்டுமே விசேஷமான ஒரு சேஷத்வம் உள்ளது – இது நாம் அவனுக்கு தாஸர்களாக இருப்பதும், அவன் நமது ஸ்வாமியாக இருப்பதும் ஆகும் (இது அசேதனங்களுக்கு இல்லை). இது போன்றே நாராயண என்ற பதம் – அனைத்திற்கும் அவன் எஜமானனாக உள்ளான், ஜீவனுக்கு மட்டுமே ஸ்வாமியாக உள்ளான் – என்பதைக் கூறுகிறது. நாம் அவனுக்கு சேஷனாக இருந்து, அவனுக்குப் ப்ரயோஜனமாக உள்ள நிலை என்பது, நம்மை நாம் அவனுக்குத் தாஸனாகக் கொள்ளும்போது கைங்கர்யம் என்ற புருஷார்த்த நிலையாகிறது. ஆக அனைத்திற்கும் எஜமானனாக (சேஷி) உள்ளான் என்பதை அறிந்தால், வெறும் மேன்மை என்பது மட்டுமே விளங்கும், ஆனால் அவன் ஸ்வாமி என்பதை அறிந்தபோது புருஷார்த்தம் கைகூடுகிறது. அனைத்தையும் காப்பாற்றும் கடமை உள்ளவன் என்பது ஈச்வரனுக்கு உள்ளது, அதற்கான திறனும் அவனுக்கு மட்டுமே உள்ளது. சேதனனுக்குத் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளும் தகுதியோ திறனோ இல்லை. இதன் காரணம் – ஈச்வரன் எதனையும் எதிர்பாராத எஜமானனாக (நிருபாதிக சேஷி) உள்ளான். ஒரு பொருளின் உரிமையாளன் அந்தப் பொருளைக் காக்க வேண்டியது அவன் கடமையன்றோ? பலம் பொருந்தியவன் பலமற்றவனைக் காப்பது உண்மையன்றோ? ஆனால் ஈச்வரன் ஒரு ஸங்கல்பம் செய்து கொள்கிறான் – ஜீவன் ஏதோ ஓர் உபாயம் மூலம் ஈச்வரன் தன்னைக் காக்கும்படிச் செய்தால் மட்டுமே, அவனைக் (ஜீவனை) காப்பது என்ற ஸங்கல்பத்தை ஈச்வரன் எடுத்துக் கொள்கிறான்.

நிலை தந்த தாரகனாய் நியமிக்கும் இறைவனுமாய்
இலது ஒன்று எனா வகை எல்லாம் தனது எனும் எந்தையுமாய்த்
துலை ஒன்று இலையென நின்ற துழாய்முடியான் உடம்பாய்
விலை இன்றி நாம் அடியோம் என்று வேதியர் மெய்ப்பொருளே.

பொருள் – அவனே நமது இருப்பிற்கும் ஆதாரத்திற்குமாக உள்ளான். நம்மை நியமிப்பவனாக அவனே உள்ளான். அனைத்திற்கும் ஈச்வரனாய் உள்ளான். அவனுக்குத் தொண்டு புரியாமல் ஏதும் இங்கு இல்லை என்னும்படி உள்ளான். அனைத்தும் அவனுக்காக என்னும்படியான ஸ்வாமியாக உள்ளான். தனக்குச் சமமாக வேறு எந்த ஒன்றும் இல்லாதவனாக உள்ளான். இப்படிப்பட்டவனும், துளசிமாலையைத் தனது திருமுடியில் சூடியுள்ளவனும் ஆகிய நாராயணனுக்கு நாம் உடம்பாகவும், வேறு பயன் கருதாத அடிமைகளாகவும் உள்ளோம் – என்று வேதம் அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

யதி ஏதம் யதிஸார்வபௌம கதிதம் வித்யாத் அவித்யாதம:
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரம் அந்திமயுகே கச்சித் விபச்சித்தம:
தத்ர ஏகத்ர ஞாடிதி உபைதி விலயம் தத்தந்மத ஸ்தாபனா
ஹேவாக ப்ரதமான ஹைதுககதா கல்லோல கோலாஹல:

பொருள் – யதிகளின் தலைவரான எம்பெருமானாரால் அருளிச் செய்யப்பட்டதும், அறியாமை என்ற இருளை நீக்குவதும் ஆகிய இந்த கருத்துக்களை (ஈச்வரனுக்கும் உலகில் உள்ள அனைத்திற்கும் இருக்கும் உறவு என்பது ஆத்மாவிற்கும் உடலுக்கும் இடையே உள்ள உறவு போன்றது என்ற கருத்து), இந்தக் கலியுகத்தில் ஒருவன் அறிந்து கொள்கிறான் என்று வைப்போம். அப்படிப்பட்டவன் உள்ள இடத்தில், மற்ற மதங்களை நிலை நிறுத்த வாதம் செய்பவர்கள் உண்டாக்கும் அலைகளின் இரைச்சல் போன்ற ஓசை, ஒலிக்காமல் அடங்கி விடுகின்றன.

## ப்ரதாந ப்ரதிதந்த்ர அதிகாரம் முற்றிற்று

துாப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

.........தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# முமுக்ஷுப்படி

## ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 4)

12. மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு

அவதாரிகை – மற்றை வ்யாபகத்வயத்துக்கும் தாழ்வு எது? என்ன, மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்டபரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு என்கிறார்.

விளக்கம் – அடுத்து ஒரு சந்தேகம் எழலாம் – திருமந்த்ரமே உயர்ந்தது என்றால் மற்ற இரண்டு வ்யாபக மந்த்ரங்களுக்கும் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய, ஓம் நமோ விஷ்ணவே) உள்ள தாழ்வு என்ன? இந்தக் கேள்விக்கு விடை அளிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, வாஸுதேவ விஷ்ணு சப்தங்களான மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டுக்கும், நாராயண சப்தம் போலே ஸ்வரூபரூபகுணாதிகளையெல்லாம் ப்ரதிபாதியாதே ஸ்வரூபமாத்ரத்தை ப்ரதிபாதிக்கையாலே, நிர்விசேஷசிந்மாத்ரவஸ்துவாதிகளான குத்ருஷ்டிகள் மிகவும் ஆதரித்துப் போருகையாகிற அசிஷ்டபரிக்ரஹமும், வ்யாப்யாத்யாஹாராதிஸாபேக்ஷதையாகிற அபூர்த்தியும் உண்டு என்கை. ஷடக்ஷரி–வ்யாப்யபதார்த்தங்களையும், வ்யாபகப்ரகாரத்தையும், வ்யாப்திபலத்தையும் வ்யாபகனுடைய குணங்களையும் சொல்லாதே, வ்யாப்திமாத்ர ப்ரகாசகமாகையாலே அபூர்ணம். வ்யாபகப்ரகாரத்தைச் சொல்லா நிற்கச் செய்தேயும், வ்யாப்யபதார்த்தங்களுக்கு வாசகசப்தம் இல்லாமையாலும் ஸர்வம் வஸதி என்று அர்த்தபலத்தாலே ஸர்வஸப்தம் புகுந்தாலும், அதில் குணம் அந்வயியாமையாலும். இனி, குணஸித்திக்காக பகவச்சப்தத்தைக் கூட்டிக் கொள்ள வேண்டுகையாலும், வ்யாப்திபலத்தைச் சொல்லாமையாலும், திருத்வாதசாக்ஷரியும் அபூர்ணம். இம்மந்த்ரம் அவை போலன்றியிலே, வ்யாப்யபதார்த்தங்களோடு, வ்யாபகப்ரகாரத்தோடு, வ்யாப்தி பலத்தோடு, வ்யாபகனுடைய குணங்களோடு வாசியற சாப்தமாகக் காட்டுகையாலே, அவற்றிற்காட்டில் இதுக்கு அர்த்த பௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யம் உண்டு (பரந்த ரஹஸ்யம்) என்று மற்றை வ்யாபகமந்த்ரங்களிரண்டினுடைய அபூர்த்தியையும் திருமந்த்ரத்தினுடைய அர்த்தபூர்த்தியையும் ஸுஸ்பஷ்டமாக ஆச்சான்பிள்ளை அருளிச்செய்தாரிறே.

விளக்கம் – நாராயண என்ற பதம் அவனுடைய ஸ்வரூபம், ரூபம் மற்றும் குணங்கள் ஆகிய மூன்றையுமே வெளிப்படுத்துகிறது. ஆனால் வாசுதேவ என்ற பதமும், விஷ்ணு என்ற பதமும் அவனுடைய ஸ்வரூபத்தை மட்டுமே வெளிப்படுத்துகின்றன. ஆகவே அவனை குணங்கள் இல்லாத ஸ்வரூபம் (ப்ரஹ்மம்) என்று கருதுகிற அத்வைதிகள், இந்தப் பதங்களால் அவனைக் கூறுகின்றனர். ஆக, வேதங்களுக்குத் தவறான பொருள் கூறும் அத்வைதிகளாலும், மற்றவர்களாலும் ஆதரிக்கப்படுவதால், அந்தப் பதங்கள் ஏற்பதற்கு இல்லை. மேலும் அவை, பகவான் எங்கும் உள்ளவன் போன்ற தன்மைகளைக் கூறுவதில்லை. பெரியவாச்சான் பிள்ளை (குறிப்பு: ஸ்ரீமணவாளமாமுனிகள் தனது வ்யாக்யானத்தில் ஆச்சான்பிள்ளை என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அவர் யாரைக் குறிப்பிட்டார் என்பதில் பல சர்ச்சைகள் உள்ளன. ஆனால், பெரியவாச்சான் பிள்ளையின் பரந்து விரிந்துள்ள க்ரந்தங்களைக் காணும்போது, அவரை அல்லாமல் வேறு யாரையும் இங்கு கூறியிருக்க இயலாது என்பது அடியேனின் தாழ்ந்த கருத்து) தனது பரந்த ரஹஸ்யத்தில் பின்வருமாறு விளக்குகிறார் – ஆறு எழுத்துள்ள மந்த்ரம் (ஓம் நமோ விஷ்ணவே) அவன் எங்கு வ்யாபித்துள்ளான், எதற்காக வ்யாபித்துள்ளான்,

எவ்விதமாக வ்யாபித்துள்ளான், வ்யாபித்துள்ள அவனது குணங்கள் யாவை போன்றவற்றை விளக்கவில்லை. அந்த மந்த்ரம் அவன் வ்யாபித்துள்ளான் என்று மட்டுமே கூறுவதால், அந்த மந்த்ரம் முழுமையானது அல்ல. அடுத்துள்ள பன்னிரண்டு எழுத்து கொண்ட மந்த்ரம் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய), அவன் எவ்விதம் பரவியுள்ளான் என்பதை விளக்கினாலும், அவன் எதில் வ்யாபித்துள்ளான் என்பதை விளக்கவில்லை. அவன் எதில் வ்யாபித்துள்ளான் என்பதை – ஸர்வம் வஸதி – என்று ஸர்வ என்னும் பதம் மூலம் (எங்கும் என்ற பொருள்பட) கூறினாலும், அதில் அவனுடைய குணங்களை வெளிப்படுத்தவில்லை. ஆக அவனது குணங்களை வெளிப்படுத்திக் கூறுவதற்காக, பகவான் (ஓம் நமோ பகவதே வாஸுதேவாய என்பதில் உள்ள பகவதே என்ற பதம்) என்ற பதத்தை சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் அந்த மந்த்ரம், அவன் ஏன் வ்யாபித்துள்ளான் என்பதை விளக்கவில்லை. திருமந்த்ரம் இவற்றைப் போன்று அல்ல. அவன் எதனை வ்யாபித்துள்ளான், ஏன் வ்யாபித்துள்ளான், அவனது குணங்கள் என்ன என்பதைத் திருமந்த்ரம் மிகவும் தெளிவாக விளக்குகிறது. ஆக, திருமந்த்ரத்தின் பொருள் மிகவும் ஆழமாக உள்ளதால், மற்ற இரண்டு மந்த்ரங்களை விட, இது உயர்ந்தது.

13. இத்தை வேதங்களும், ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

அவதாரிகை – இதுக்கு சிஷ்டபரிக்ரஹம் உண்டோ? என்ன, அருளிச்செய்கிறார் இத்தை என்று தொடங்கி.

விளக்கம் – திருமந்த்ரத்திற்கு நல்லவர்களின் ஆதரவு உண்டா என்ற சந்தேகம் எழலாம் – இதற்கு விடை அளிக்கிறார்.

வ்யாக்யானம் – அதாவது, விஷ்ணுகாயத்ரியிலே வ்யாபகமந்த்ரத்ரயத்தையுஞ் சொல்லுகிறவளவில், ப்ரதமத்திலே நாராயண சப்தத்தை ப்ராதாந்யேந ப்ரதிபாதிக்கையாலும், விச்வம் நாராயணம் என்று தொடங்கி. நாராயணபரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந்த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: என்று ஸகல வேதாந்தஸாரபூதமான நாராயணாநுவாகத்திலும். ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவாப்ருதிவீ என்று மஹோபநிஷத்திலும். சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண: ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண: என்று தொடங்கி, திசச்ச ப்ரதிசச்ச நாராயண: என்று முடிவாக நடுவு அடைய ஸுபாலோபநிஷத்திலும். யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரிரம் என்று தொடங்கி, யஸ்ய ம்ருத்யு: சரீரம் என்கிறது ஈறாக நடுவுள்ள பர்யாயங்கள்தோறும். ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: என்று அந்தர்யாமி பராஹ்மணத்திலும் வாஸுதேவ விஷ்ணு சப்தங்களை அநாதரித்து, நாராயண சப்தத்தையிட்டு, பகவத்ஸ்வரூபாதிகளை நிர்த்தேசிக்கையாலும், அபௌருஷேயமாய், நித்யநிர்த்தோஷமாய், ஸ்வத: ப்ரமாணங்களான வேதங்களும் விரும்பிற்றின. யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர:, பூத்வோர்த்வபாஹுர்த்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமிவ: ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத்பர:, ஸர்வ வேதாந்த ஸாரார்த்த: ஸம்ஸாரார்ணவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ரூணாம் அபுநர்ப்பவ காங்க்ஷிணாம், ஆர்த்தா விஷண்ணா சிதிலாச்ச பீதா கோரேஷு சவ்யாதிஷு வர்த்தமாநா: ஸங்கீர்த்ய நாராயண சப்தமாத்ரம் விமுக்த துக்காஸ் ஸுகிநோபவந்தி, நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வஸவர்த்தினீ ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம், கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்ததா ஸாதக: இத்யாதிகளாலே வேதார்த்தோபப்ரும்ஹணங்களாயிருக்கிற ஸ்வப்ரபந்தங்களிலே பல விடங்களிலும் இத்தை சிலாகித்துக்கொண்டு சொல்லுகையாலே, வேதார்த்த விசதீகரண ப்ரவ்ருத்தரான வ்யாஸாதி பரமருஷிகளும் விரும்பினார்கள். வண்புகழ் நாரணன், செல்வ நாரணன் என்று தொடங்கி வாழ்புகழ் நாரணன் என்று முடிவாக ஆதிமத்யாவஸாநமாக நம்மாழ்வார் அருளிச்செய்கையாலும். நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று தொடங்கி ஓவாதே நமோ நாரணாவென்பன் என்று பெரியாழ்வாரும், நாத்தழும்பெழ நாரணா என்று தொடங்கி நலந்திகழ் நாரணன் என்று பெருமாளும், நான்முகனை நாராயணன் படைத்தான் என்று தொடங்கி எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே என்று திருமழிசைப்பிரானும், நான்

கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம் என்று உபக்ரமதசையிலே ஒரு கால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொல்லி நாராயணாவோ. மணிவண்ணா. நாகணையாய். வாராய் என்று திருமங்கையாழ்வாரும் உபக்ரமத்தோடு உபஸம்ஹாரத்தோடு வாசியற அருளிச்செய்கையாலும், நன்மாலை கொண்டு நமோ நாரணா வென்னும் சொன்மாலை கற்றேன் என்றும், நாரணாவென்றோ வாதுரைக்கும் உரையுண்டே என்றும், ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு, நாரணன் தன் நாமங்கள், பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் என்றும் நாமம் பல சொல்லி நாராயணா என்றும் முதலாழ்வார்களும் அருளிச்செய்கையாலும், மயர்வற மதிநலம் அருளினன் என்கிறபடியே நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தாலே ஸமதிகத ஸமஸ்த வஸ்து வாஸ்தவரான ஆழ்வார்களெல்லாரும் விரும்பினார்கள். இதர மந்த்ரங்களை அநாதரித்து இத்தையே தந்தாமுக்குத் தஞ்சமாக அநுஸந்தித்து, உபதேச வேளையிலும் தந்தாமைப் பற்றினவர்களுக்கும் இத்தையே உஜ்ஜீவந ஹேதுவாக உபதேசித்துப் போருகையாலே அவ்வாழ்வார்களைப் பின் சென்ற ஆசார்யர்களெல்லாரும் விரும்பினார்களென்கை. இத்தால் மந்த்ராந்தரங்களிற் காட்டில் இம்மந்த்ரத்துக்குண்டான வைபவஞ் சொல்லிற்றாய்த்து.

விளக்கம் – விஷ்ணு காயத்ரியில் மூன்று வ்யாபக மந்த்ரங்கள் கூறும்போது, முதலில் நாராயண மந்த்ரமே கூறப்பட்டது. பின்வரும் பல வரிகளில், பகவானின் ஸ்வரூப–ரூப–குணங்களை நாராயண என்ற பதம் மூலம் உணர்த்தியும், வாஸுதேவ மற்றும் விஷ்ணு என்ற பதங்களை விலக்கியும் கூறப்பட்டதைக் காணலாம்:

- தைத்திரீய நாராயணவல்லி – விச்வம் நாராயணம் – நாராயணனே அனைத்தும் – என்று தொடங்கி – நாராயணபரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர: நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சிஜ்ஜகத்யஸ்மிந்த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித: – நாராயணனே ப்ரப்ரஹ்மம், நாராயணனே உயர்ந்த தத்வம், நாராயணனே உயர்ந்த ஜ்யோதி, நாராயணனே பரமாத்மா. இந்த உலகில் நாம் பார்ப்பன மற்றும் கேட்பன ஆகிய அனைத்துப் பொருள்களின் உள்ளும் புறமும் நாராயணனே பரவியுள்ளான் – என்று முடித்தது.

- மஹா நாராயண உபநிஷத் – ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநோ நேமே த்யாவா ப்ருதிவீ – ப்ரளயத்தின்போது நாராயணன் மட்டுமே இருந்தான். ப்ரம்மனும், சிவனும், ஆகாயமும், பூமியும் இல்லை.

- ஸுபால உபநிஷத் – சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண: ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண: – கண்களால் காண்பவையும், அவற்றைக் காணும் கண்களும் நாரயணனே, காதால் கேட்பவையும், அவற்றைக் கேட்கும் காதுகளும் நாராயணனே – என்று தொடங்கி – திசச்ச ப்ரதிசச்ச நாராயண: – திசைகளும் உபதிசைகளும் நாராயணனே – என்று முடித்தது.

- ஸுபால உபநிஷத் – யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ, யாருக்கு பூமி சரீரமோ – என்று தொடங்கி – யஸ்ய ம்ருத்யு: சரீரம் – யாருக்கு ம்ருத்யு சரீரமோ – என்று முடித்தது.

- ஸுபால உபநிஷத் – ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: – அனைத்து உயிர்களின் அந்தர்யாமியாக, அவைகளின் ஏற்ற–தாழ்வுகளால் தீண்டப்படாமல் உள்ளவனாக, பரமபதத்தில் உள்ளவனாக நாராயணன் இருக்கிறான்.

இப்படியாக, யாராலும் இயற்றப்படாமல் உள்ளதும், தோஷங்கள் அற்றதும், அனைத்திற்கும் ப்ரமாணங்களாக உள்ளதும் ஆகிய வேதங்கள் – வாஸுதேவன், விஷ்ணு ஆகிய சபதங்களை எடுக்காமல், பகவானின் ஸ்வரூப–ரூப–குணங்களை விளக்க வல்லதான, நாராயண சப்தத்தையே மிகவும் விரும்பியது காண்க. பல ருஷிகள் தங்களது மந்த்ரங்களில் பின்வருமாறு கூறினர்:

- நாரதீயம் (1–41) – யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத்பர: ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்தி சாஷ்டாக்ஷராத்பர: – மற்ற தெய்வங்களுக்குள் நாராயணனை விட மேலான தெய்வம் இல்லாதது போன்று, மந்த்ரங்களில் அஷ்டாக்ஷரத்தை விட மேலானது இல்லை.

- பூத்வோர்தவபாஹுரத்யாத்ர ஸத்யபூர்வம் ப்ரவீமிவ: ஹே புத்ரசிஷ்யா: ச்ருணுத ந மந்த்ரோஷ்டாக்ஷராத்பர – கேளுங்கள், எனது கரத்தை உயர்த்தி, நான் உறுதியாகக் கூறுகிறேன் – அஷ்டாக்ஷரத்தை விட உயர்ந்த மந்த்ரம் வேறு இல்லை.

- நாரதீயம் (1–42) – ஸர்வ வேதாந்த ஸாரார்த்த: ஸம்ஸாரார்ணவதாரக: கதிரஷ்டாக்ஷரோ ந்ருணாம் அபுநர்ப்பவ காங்க்க்ஷிணாம் – வேதாந்தங்களின் சாரமாக உள்ளதும், ஸம்ஸாரம் என்ற கடலைக் கடக்க உதவுவதும் ஆகிய அஷ்டாக்ஷரமே, மறு பிறவியை வேண்டாத மனிதர்களால் புகவேண்டியதாகும்.

- விஷ்ணு ஸஹஸ்ரநாமம் – ஆர்த்தா விஷண்ணா சிதிலாச்ச பீதா கோரேஷு சவ்யாதிஷு வர்த்தமாநா: ஸங்கீர்தய நாராயண சப்தமாத்ரம் விமுக்த துக்காஸ் ஸுகிநோ பவந்தி – செல்வத்தை இழந்து வருந்துபவர்கள், செல்வம் கிடைக்காமல் துயரத்தில் உள்ளவர்கள், ஆத்ம அனுபவம் கைகூடாமல் உள்ளவர்கள், பகவத் அனுபவம் கிட்டாமல் பயத்தில் உள்ளவர்கள், கொடிய நோயினால் துயரத்தில் உள்ளவர்கள் ஆகிய அனைவரும் நாராயண சப்தத்தின் மூலம் தங்கள் துயர் நீங்கி, இன்பத்தை அடைகின்றனர்.

- காருட புராணம் – நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வஸவர்த்தினீ ததாபி நரகே கோரே பதந்தீதி கிமத்புதம் – நாராயணன் என்ற சொல்லும் உள்ளது, நாக்கும் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளது. ஆயினும் மக்கள் நரகத்தில் விழுகின்றனரே. இது வியப்பாக உள்ளதே.

- நாரதீயம் (1–40) – கிம் தத்ர பஹுபிர் மந்த்ரை: கிம் தத்ர பஹுபிர் வ்ரதை: நமோ நாராயணாயேதி மந்த்ர: ஸர்வார்த்ததா ஸாதக: – பல மந்த்ரங்களால் என்ன பயன் உள்ளது? விரதங்கள் மூலம் என்ன பயன் உள்ளது? நமோ நாராயணா என்ற மந்த்ரம் அனைத்து பயன்களையும் அளிப்பதாகும்.

இப்படியாக வேதங்களின் பொருளை அறிவதிலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்ட வ்யாசர் முதலான ருஷிகள் நாராயண சப்தத்தையே விரும்பினர். அடுத்து, ஆழ்வார்கள் கூறுவதைக் காணலாம்.

- திருவாய்மொழியில் – வண்புகழ் நாரணன் (1–2–10), செல்வ நாரணன் (1–10–8) என்று தொடங்கி, வாழ்புகழ் நாரணன் (10–9–1) என்று முடிவாக தொடக்கம், நடுப்பகுதி மற்றும் இறுதிப் பகுதி ஆகியவற்றில் நம்மாழ்வார் அருளிச்செய்தார்.

- பெரியாழ்வார் – நாடு நகரமும் நன்கறிய நமோ நாராயணாய (திருப்பல்லாண்டு – 4) என்று தொடங்கி, ஓவாதே நமோ நாரணாவென்பன் (பெரியாழ்வார் திருமொழி – 5–1–3) என்று அருளிச்செய்தார்.

- குலசேகராழ்வார் – நாத்தழும்பெழ நாரணா (பெருமாள் திருமொழி – 2–4) என்று தொடங்கி, நலந்திகழ் நாரணன் (பெருமாள் திருமொழி – 10–11) என்று அருளிச்செய்தார்.

- திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் – நான்முகனை நாராயணன் படைத்தான் (1) என்று தொடங்கி, எட்டெழுத்தும் ஓதுவார்கள் வல்லர் வானமாளவே (77) என்று திருச்சந்தத்தில் முடித்தார்.

- திருமங்கையாழ்வார் – நான் கண்டுகொண்டேன் நாராயணா என்னும் நாமம் (பெரியதிருமொழி – 1–1–1) என்று தனது திருமொழியின் ஆரம்பத்தில் ஒருமுறை கூறியது போன்று பலமுறை தனது திருமொழியில் நாராயண நாமத்தைச் சொல்லி, நாராயணாவோ. மணிவண்ணா. நாகணையாய். வாராய் (சிறிய திருமடல் – 50) – என்று பல இடங்களில் தொடக்கம், முடிவு என்ற வேறுபாடு இல்லாமல் அருளிச்செய்தார்.

- நன்மாலை கொண்டு நமோ நாரணா வென்னும் சொன்மாலை கற்றேன் (முதல் திருவந்தாதி – 57), நாரணா என்று ஓவாது உரைக்கும் உரையுண்டே (முதல் திருவந்தாதி – 95), ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு (இரண்டாம் திருவந்தாதி – 1), நாரணன் தன் நாமங்கள் (இரண்டாம் திருவந்தாதி – 2), பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் (இரண்டாம் திருவந்தாதி – 81), நாமம் பல சொல்லி நாராயணா (மூன்றாம் திருவந்தாதி – 8) – என்று பலவிதமாக முதலழ்வார்கள் அருளிச்செய்தனர்.

இப்படியாக எந்தவிதமான ப்ரதிபலனையும் எதிர்பாராமல் – மயர்வற மதிநலம் அருளினன் – என்பதற்கு ஏற்ப, எம்பெருமான் அளித்த கடாக்ஷத்தின் மூலம், அனைத்து விஷயங்களையும் அறிந்த ஆழ்வார்கள், நாராயண சப்தத்தையே மிகவும் விரும்பினர். மற்ற இரண்டு மந்த்ரங்களையும் எடுக்காமல், இந்த மந்த்ரத்தை மட்டுமே தங்களுடைய தஞ்சம் என்று எண்ணியபடி, தங்களை அண்டியவர்களுக்கு இந்த மந்த்ரத்தையே ஆழ்வார்களைப் பின்பற்றி, ஆசார்யர்கள் உபதேசம் செய்தனர். இதன் மூலம் மற்ற மந்த்ரங்களை விட, இந்த மந்த்ரத்திற்கு உள்ள பெருமையைக் கூறினார்.

14. வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம்.

அவதாரிகை – இனி வாச்யந்தன்னிலும் இதுக்குண்டான வைபவத்தை அருளிச் செய்கிறார் வாச்ய ப்ரபாவம் போலன்று வாசக ப்ரபாவம் என்று.

விளக்கம் – அடுத்து, இந்த மந்த்ரத்திற்கு, இந்த மந்திரத்தால் புகழப்படும் எம்பெருமானை விடப் பெருமை அதிகம் என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – அதாவது, இதுக்கு வாச்யனாயிருந்துள்ள ஈச்வரனுடைய பெருமை போலன்று தத்வாசகமான இதன் பெருமையென்றபடி.

விளக்கம் – இந்த மந்த்ரத்தின் பொருளாக உள்ள ஈச்வரனின் பெருமையை விட, அவனைப் பற்றிக் கூறும் இந்த மந்த்ரம் பெருமை உடையது என்றார்.

15) அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்.

அவதாரிகை – அதுதான் ஏது என்னவருளிச்செய்கிறார் அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்றுதவும் என்று.

விளக்கம் – இந்த மந்த்ரத்துக்கு அப்படி என்ன பெருமை என்ற சந்தேகம் எழலாம். இதனை இப்போது விளக்குகிறார்.

வ்யாக்யானம் – அதாவது இதுக்கு வாச்யனானவன் ஸந்நிஹிதனன்றிக்கே தூரஸ்தனாயிருந்த காலத்திலும் வாசகமான இது ஆஸந்நமாய் நின்று தன்னை வசித்தவர்கள் அபேக்ஷிதங்களை ஸாதித்துக் கொடுக்குமென்கை.

விளக்கம் – இந்த மந்த்ரத்தால் கூறப்படும் பரம்பொருளான எம்பெருமான் அருகில் இல்லாமல் தூரத்தில் உள்ள போதிலும், அவனைப் பற்றிக் கூறும் இந்த மந்த்ரம், அதனை உச்சரித்தவர்களின் அருகிலேயே நின்று, அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும்.

16) த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே.

அவதாரிகை – இப்படி வாச்யன் தூரஸ்தனாயிருக்க, வாசகம் உதவின இடம் உண்டோ? என்று அருளிச்செய்கிறார் த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே என்று.

விளக்கம் – இப்படியாக எம்பெருமான தூரத்தில் இருந்தபோது, அவனது திருநாமம் அருகில் இருந்து உதவிய சம்பவம் ஏதேனும் உண்டா என்ற ஐயம் எழலாம். இதற்கு விடை தருகிறார்.

வ்யாக்யானம் – அதாவது மஹாஸதஸ்ஸிலே துச்சாஸனன் வஸ்த்ராபஹாரம் பண்ணுகிறபோது மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி: என்று முன்பே ஸ்ரீவஸிஷ்ட மஹர்ஷி சொல்லி வைத்ததை நினைத்து, சங்க சக்ர கதா பாணே த்வாரகாநிலய அச்யுத கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் என்று சரணம் புகுந்த த்ரௌபதிக்கு அவ்வாபத்திலே கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம் என்கிறபடியே வாச்யனான க்ருஷ்ணன் தூரஸ்தனாயிருக்கச் செய்தேயும், வஸ்த்ரத்தை வர்த்திப்பித்துக்கொடுத்தது, அவ்வவதாரத்துக்கு வாசகமான கோவிந்தனென்கிற திருநாமமிறேயென்கை. நாரயண சப்தார்த்தத்தில் ஏகதேசத்துக்கு வாசகமான ஒரு திருநாமம் செய்தபடி கண்டால், இதன் ப்ரபாவம் கிம்புநர்ந்யாயஸித்தமிறே என்று கருத்து.

விளக்கம் – துரியோதனனின் சபையில், துச்சாதனன் த்ரௌபதியின் ஆடைகளைக் களைய முற்பட்டான். அப்போது த்ரௌபதி, வஸிஷ்ட முனிவர் தன்னிடம் முன்பு ஒரு கால கட்டத்தில் – மஹத்யாதிபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந் ஹரி: – மிக பெரிய ஆபத்து வரும்போது ஸ்ரீஹரியை நினைக்க வேண்டும் – என்று கூறியது நினைவுக்கு வந்தது. உடனே அவள் – சங்க சக்ர கதாபாணே த்வாரகா நிலயாச்யுதா கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் – சங்கு சக்ரம் ஏந்தியவனே, அடியார்களை நழுவ விடாத கோவிந்தனே, துவாரகை வாசனே, தாமரை போன்ற கண்கள் கொண்டவனே, உன்னிடம் சரணம் புகுந்த என்னைக் காக்கவேண்டும் – என்றாள். அந்த நேரத்தில் க்ருஷ்ணன் வெகுதூரத்தில் இருந்தான். இதனைக் கண்ணன் – கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம் – த்ரௌபதி என்னைக் கோவிந்தா என்று அழைத்தபோது நான் வெகு தூரத்தில் இருந்தேன் – என்று கூறினான். ஆக கோவிந்த நாமத்தால் கூறப்படும் கண்ணன் வெகு தூரத்தில் இருந்தபோதும், அந்தத் திருநாமமே அவளுக்கு வஸ்திரத்தை அளித்தது. நாராயண என்ற சப்தத்தில் உள்ள பல உட்பொருள்களில் சிலவற்றை மட்டுமே உணர்த்தவல்ல கோவிந்தன் என்ற திருநாமத்திற்கே இந்தனை மேன்மை இருந்தால், நாராயணன் என்ற திருநாமத்திற்கு எத்தனை மேன்மை இருக்கும் என்று கருத்து.

ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி சமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த

# சிறிய திருமடல்

## (பகுதி – 4)

அதுக்கு நிபந்தநமென்னென்னில், (அறிவழிந்து) – கேட்கைக்குப் பரிகரமில்லாமையாலே. (தீராவுடம்போடு) – இப்படி ஆற்றாமை மிக்கால் அச்சேத்யம் அதாஹ்யம் என்னும் ஆத்ம வஸ்துவைப்போலே ஆகவேணுமோ அழியக்கடவதான உடம்பு? (பேதுறுவேன் கண்டிரங்கி) – இப்படி ஆற்றாமையாலே அறிவுகெட்டுக் கிடக்கிற என்னைக் கண்டு இரங்கி. ஆச்ரயத்தில் இரக்கம் குடிபுகுராமல் வார்த்தை சொல்லவிறே இவள் கற்றது. அவளும் ச்ராவ்யமாக வார்த்தை சொல்லக் கற்றாள்காணும். என் தசாவிபாகம் இருந்தபடி. (ஏரார்கிளிக்கிளவி) – கிளியின் பேச்சு–பேய்ப்பாட்டு என்னும்படி காணும் இவள் பேச்சின் இனிமை. (எம்மனை) – இதுக்கு நிபந்தநமென்னென்னில் பெற்ற தாயாகையாலே. அதாவது அதிமாத்ரப்ராவண்யம் ஆகாது என்று நிஷேதிக்குமதுக்கு மேற்பட என் ஸத்தையை அழியவிடாளிறே. (தான் வந்தென்னை) – என் ஆற்றாமை கண்டபடியாலே தானே வந்து.

விளக்கம் – அதையும் செய்யவில்லை. இவ்விதம் கேட்காமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால். (அறிவழிந்து) – கேட்பதற்கு ஏற்ற அறிவு இல்லாமல் இருந்தேன். (தீரா உடம்போடு) – பிறவித் துன்பம் அதிகமாக ஏற்படும் இந்த நேரத்தில், அழியக்கூடியது என்று அனைவராலும் சொல்லப்படும் இந்த உடம்பு அழியாமல், ஆத்மாவானது – அச்சேத்யம் அதாஹ்யம் – வெட்டவும் எரிக்கவும் இயலாதது – என்று எவ்விதம் அழிக்க இயலாமல் உள்ளதோ, அதுபோன்று அழியாமல் உள்ளதே. (பேதுறுவேன் கண்டு இரங்கி) – இப்படியாகப் பிரிவுத்துன்பம் காரணமாக, அறிவு தடுமாறி நிற்கும் என்னைப் பார்த்து, என் மீது எனது தாய் இரக்கம் கொண்டாள். இதுவரை இனிமையான சொற்களைக் கூறாமல் என்னைக் கடிந்தபடி இருந்த அவள், எனது நிலை இருந்து கண்டு, இரக்கம் கொண்டு, இரக்கம் நிறைந்த சொற்களை எவ்விதம் கூறுவது என்று கற்றுக் கொண்டாள் போலும். இப்படியாக இருந்தது எனது நிலை. (ஏரார் கிளிக்கிளவி) – என் தாயின் சொற்கள் அழகான கிளியின் பேச்சு போன்று இருந்தது. (எம்மனை) – இவள் இவ்விதம் பேசக் காரணம் என்னவென்றால் – எனது தாயாக இருப்பதாலேயே ஆகும். அவள் பொதுவாக என்னிடம் – அவனிடம் அதிக அன்புடன் உள்ளது சரியல்ல – என்று கண்டிப்பாள். ஆனால் எனது நிலையைக் கண்டு மேலும் என்னை வருத்தி அழிக்க மாட்டாள். (தான் வந்து என்னை) – எனது துன்பம் கண்டு தானாகவே எனது தாய் என் அருகில் வந்தாள்.

(சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) – மாயன் தமரடி நீறுகொண்டு அணியமுயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கு என்றிருக்கும் வைஷ்ணவ ஸந்தாநமாகையாலே, தன் பாதரேணுவை வாங்கி ரக்ஷையாக இட்டாள். (செங்குறிஞ்சி) – என் ஆற்றாமையைக் கண்ட கலக்கத்தாலே தன் பாதரேணுவை எனக்கு ரக்ஷையாக இட்டவளவில் பர்யவஸியாமை, தேவதாந்தரங்களென்றால் அருவருக்கும் குடியாயிருந்துவைத்து, தேவதாந்தரங்களின் காலிலே விழும்படி ஆயிற்றுக்காணும். (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு) – ஒரு திருத்துழாய் பரிமாறாத தேவதையாக வேணுமோ பின்னை? (தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்) – தான் வகுத்த விஷயத்திலே ஓரஞ்ஜலி பண்ணினால் அது ஸாதநத்தில் அந்வயிக்கிற்செய்வதென் என்றிருக்கக்கடவ தான், ஓரஞ்ஜலியுமகப்படப் பண்ணினாள் போலே காணும்.

விளக்கம் – (சீரார் செழும்புழுதிக் காப்பிட்டு) – திருவாய்மொழி (4–6–6) – மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில் மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கு –

என்று சிந்தித்தபடி உள்ள வைஷ்ணவ குலத்தில் பிறந்ததால், எனது தாய் பாகவதர்களின் திருவடித் தூசிகளைச் சேகரித்து, எனக்குக் காப்பாக, என் நெற்றியில் இட்டாள். (செங்குறிஞ்சி) – எனது துன்பத்தைக் கண்டு மனம் கலங்கி பாத தூசிகளை இட்டவள் அத்துடன் நிற்கவில்லை. அதில் மனம் நிறைவு கொள்ளாமல், எம்பெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வம் என்றாலே அருவருப்பு கொள்ளும் குலத்தில் பிறந்த எனது தாய், குறிஞ்சி மாலை அணிந்த க்ஷுத்ர தெய்வத்தின் காலில் விழுந்தாள். (செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு) – துளசி மாலை அணியாத க்ஷுத்ர தெய்வத்தின் கால்களிலா விழவேண்டும்? (தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்) – பகவானின் விஷயத்தில் அஞ்சலி செய்து விட்டால், அந்த உபாயம் மூலம் நன்மை எற்படுவது இருக்க, மற்ற தேவதையிடம் சென்று இவ்விதம் செய்து விட்டாளே.

(அதனாலும் தீராதென் சிந்தை நோய்) – பண்டே மிக்கு வருகிற நோவு தேவதாந்தர ஸ்பர்சத்தால் அற மிக்கது. (தீராதென் பேதுறவு) – அறிவு குடிபுகுந்ததில்லை. (வாராது மாமை) – நிறம் வருமென்கைக்கு ஹேதுவின்றிக்கே இருக்கச்செய்தே, நிறம் வந்ததில்லை என்றாளிறே. என் ஆற்றாமை கண்டால் நிறம் தானே வரவேணும் என்றிருக்கிறாள் காணும். (மற்றாங்கே யாரானும் மூதறியும் அம்மானைமார் சொல்லுவார்) – தங்களை அழையாதிருக்கச்செய்தே மூதறிவாட்டிகளானவர்கள் சொல்லுகிறார்கள். (மூதறியும் அம்மானைமார் சொல்லுவார்) – இந்த்ரன் படிகளிருக்கும்படியென் என்று ஒருத்தி ஒருத்தியைக் கேட்க தொண்ணூற்றெட்டு இந்த்ராதிகளை ஸேவித்தேன், இந்த்ரன்படி கேட்கிறாய், வேணுமாகில் சொல்கிறேன் என்றாளிறே. அப்படியே பழையராய், நோய்களுமறிந்து, நோய்க்கு நிதானமுமறிந்து பரிஹாரமும் பண்ணுவித்துப் போரும் மூதறிவாட்டிகள் சொல்லுகிறார்கள். (பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்) – பூமியில் அறிவாரும் அறியாதாருமொக்கக் கட்டுபடுத்தக்கால் நோய்க்கு நிதாநம் தெரியும் என்று சொல்லா நிற்பர்கள். அத்தைச் செய்யுங்கோளென்ன, அதுக்கு ப்ரயோஜனமென்மென்னில், (ஆரானும் மெய்ப்படுவனென்றார்) – பெண்களைத் தீம்புசெய்து முகங்காட்டாதேயிருக்கும் க்ருஷ்ணனேயாகிலும் வெளிப்படுமென்றார்கள்.

விளக்கம் – (அதனாலும் தீராதென் சிந்தை நோய்) – எனது மனநோய் முன்பே அதிகமாக இருந்தது. இப்போது க்ஷுத்ர தெய்வத்தின் தொடர்பால் மேலும் அதிகமாகிவிட்டது. (தீராதென் பேதுறவு) – எனது அறிவு மீண்டும் என்னிடம் வரவில்லை. (வாராது மாமை) – இவள் இழந்த நிறம் மீண்டும் வந்து விடும் என்று இவள் இருந்தபோது, அது வருவதற்கான காரணமே இல்லாமல் இருந்ததால், நிறம் மீண்டும் வரவில்லை என்றாள். (மற்றாங்கே யாதானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார்) – எனது நிலையைக் கண்டு, நான் அழைக்காமல் இருந்தபோதிலும், அவர்களாகவே நான் உள்ள இடம் தேடி வந்த சில வயதான, அறிவுள்ள கிழவிகள் கூறுகிறார்கள். (மூதறியும் அம்மனை மார் சொல்லுவார்) – அதில் ஒரு கிழவி மற்றவளிடம் – இந்த்ரன் எப்படி இருப்பான் என்று உனக்குத் தெரியுமா – என்று கேட்டாள். அதற்கு மற்றொரு கிழவி – தொண்ணூற்றெட்டு இந்த்ரன்களை நான் கண்டுள்ளேன், என்னிடமா இந்த்ரனைப் பற்றித் தெரியுமா என்று கேட்டாயா? இதோ சொல்லுகிறேன் – என்றாள். அந்தக் கிழவியை போன்று வயது முதிர்ந்தவர்களாக, என் போன்ற பெண்களுக்கு ஏற்படும் மன நோயை அறிந்தவர்களாக, அந்த நோய்க்கான காரணம் அறிந்தவர்களாக உள்ள கிழவிகள் கூறத் தொடங்கினர். (பாரொர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல்) – இந்தப் பூமியில் உள்ள பல மனிதர்களில், அறிந்தவர்கள் மற்றும் அறியாதவர்கள் ஆகிய அனைவரும், குறி கேட்பதன் மூலம் இந்த நோய் ஏற்படுவதற்கான காரணம் தெரியும் என்று கூறுவதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள், அதனையே செய்யவேண்டும் என்று கிழவிகள் கூறினர். இந்த முறையால் உண்டாகக்கூடிய பலன் என்ன? (ஆரானும் மெய்ப்படுவன் என்றார்) – பெண்களிடம் வம்பு செய்து விட்டு, தனது முகத்தை காண்பிக்காமல் உள்ள கண்ணனாகவே இருந்தாலும் நமக்கு வெளிப்படுவான் என்றனர்.

(அதுகேட்டு) – கட்டுப்படுத்துங்கோள் என்றார்கள் மூதறிவாட்டிகள். இவர்களும், கட்டுப்படுப்பாராக இசைந்தார்கள். அவ்வளவிலே தன்னை அழையாதிருக்கச் செய்தே, இவர்களிசைவைக் கேட்டுத் தானே வந்து புகுந்தாள் கட்டுவிச்சி. பகவத் விஷயங்களைக் கேட்கைக்கு ருசி உண்டென்றறியுமித்தனையிறே வேண்டுவது ஆசார்யர்கள் தாங்களே வந்து சொல்லுவர்களிறே. முன்புத்தை ஆசார்யர்கள் பகவத் விஷயம் சொல்லும்போது, நாலிரண்டு பேருக்காயிற்றுச் சொல்லுவது. அதுதானும்

அவர்கள் படியறிந்தால் சொல்லுவது. அங்ஙனன்றிக்கே, ருசியுடையார் என்று தோற்றினவளவிலே சொல்லுவர் எம்பெருமானார். அப்படிக்காணும் இக்கட்டுவிச்சியும்.

விளக்கம் – (அது கேட்டு) – கிழவிகள் குறி கேட்கவேண்டும் என்று உபதேசம் செய்தனர். அது கேட்டு எனது உறவினர்கள் குறி கேட்க முடிவு செய்தனர். அந்த நேரத்தில், நாங்கள் யாரும் அழைக்காமல், இந்தக் கிழவிகளின் பேச்சைக் கேட்டு, தானாகவே அங்கு ஒரு கட்டுவிச்சி வந்தாள் (கட்டுவிச்சி என்பவள் மறைமுகமாக ஆசார்யனை குறிக்கும்). பகவானைப் பற்றிய விஷயங்களை கேட்பதற்கு ஒருவனுக்கு விருப்பம் உள்ளது என்று அறிந்து கொண்டவுடன், அங்கு ஆசார்யர்கள் தாங்களாகவே வந்து நிற்பார்கள். எம்பெருமானாருக்கு முன்னே இருந்த ஆசார்யர்கள், பகவத் விஷயத்தை மிகவும் சிறந்த சிலருக்கு மட்டுமே, அவர்களது தன்மைகளை ஆராய்ந்து பார்த்து உபதேசித்தனர். ஆனால் எம்பெருமானாரோ, பகவான் மீது ஒருவனுக்குப் ப்ரியம் உள்ளது என்று அறிந்தவுடன் அவனுக்கு ஒடி வந்து உபதேசிப்பார். இது போன்று அல்லவா இந்தக் கட்டுவிச்சி வந்தாள்?

(காரார் குழல் கொண்டை) – கட்டுப்படுத்தினவள் சொல்லும் வார்த்தையிலுங் காட்டில், இவள் மயிர்முடியே இவளுக்கு போக்யமாயிருக்கிறபடி. ஆசார்யர்களுடைய ஆத்ம குணங்களிலுங்காட்டில் தேஹகுணமே உத்தேச்ய மாயிருக்கிறபடி. (கட்டுவிச்சி கட்டேறி) – தேவாவிஷ்டையானாள். அதாவது கொட்டாவி கொள்ளாதே மூரி நிமிராதே செய்தபடி. (சீரார் சுளகில்) – சுளகுக்குச் சீர்மையாவது – பதரறுத்து, மணியும் மணியாக்கிப் பதரும் பதராக்குமதிறே. இச்சுளகும் – தேவதாந்தரங்களாகிற கூளத்தையும் பதரையுமறுத்து, மணியே மணிமாணிக்கமே என்கிற மணியைக் காட்டப்புகுகிற சுளிகிறே. ஆகையால் சீரார்சுளகு. (சில நெல் பிடித்தெறியா) – அவையுஞ்சில நெல்லே என்கிறாள். (வேரா விதிர்விதிரா மெய்சிலிரா) – பகவத்விஷயம் சொல்லப்புக்குத் தான் உடைகுலைபட்டபடி. மொய்த்துக் கண்பனிசோர மெய்கள் சிலிர்ப்ப என்னக்கடவதிறே. முநே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா ஜ்ஞாதுமேவம் விதம் வரம் என்று ப்ரச்நம் பண்ணின ஸ்ரீவால்மீகி பகவானுக்கு, ஸ்ரீநாரத பகவான் சொல்லுகிறேன் என்றான். அதுக்கு கருத்தென்னென்னில் அங்யபரராய் ப்ரக்ருதி ஸத்தரானவாறே சொல்லுகிறே னென்றானிறே. பதார்த்தங்களை உள்ளபடி அறிந்திருக்கிறவன் இனி ப்ரக்ருதி ஸ்தனானவாறே சொல்லுகிறேனென்றது – ப்ரச்நரூபத்தாலே ராமகுணங்களை ஸ்மரித்து, நெஞ்சை உடைகுலையப்பண்ணினானாயிற்று. தெளிந்து நான் ப்ரக்ருதி ஸ்தனானவாறே சொல்லுகிறேன் என்றானாமித்தனையிறே. நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும் என்னுமாபோலே. (கண்டு வணங்கினார்க்கு இத்யாதி) (காமனுடல் கொண்ட தவத்தாற்கு) – தன்னையும் அபிமத விஷயத்தையும் சேர்த்ததுவே குற்றமாகக் காமனை தஹித்த அக்நிவர்ணனானவனிறே ருத்ரன். அவனுக்கு, (உமையுணர்த்த இத்யாதி) – ப்ரஸ்நரூபத்தாலே இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவன் ஆர்? என்று உமை கேட்க, சிஷ்யாசார்ய க்ரமமறியாத தான், தென்றலும் சிறுதுளியும் பட்டாற்போலே, அவன், அவளைத் திருநாமங்களைச் சொல்லவிட்டுத் தான் கேட்டிருந்தானாயிற்று. (அங்கு ஆரலங்கல் ஆனமையால் ஆய்ந்து) – கேட்டுக் குறுயழியாதேயிருந்தானோவென்னில் முடியுண்ட மாலைபோலே ஒசிந்திருந்தான். திருநாம ப்ரஸங்கத்தாலே வன்னெஞ்சனான ருத்ரன் பட்டபடி கண்டால், (கண்டு வணங்கினார்க்கென்னாங்கொல்) – ஸாக்ஷாத்கரித்தார் எனபடுகிறார்களோ?

விளக்கம் – (கார் ஆர் குழல் கொண்டை) – தனது கூந்தலைக் கட்டுப்படுத்திய அவள் கூறும் சொற்களை விட, அவளது கூந்தலே எனது தாய்க்கு இதமாக இருந்தது. இந்த நிலை, ஆசார்யர்களின் ஆத்ம குணங்களை விட, அவர்களின் தேஹ குணமே ஏற்றதாக இருப்பது போன்றதாகும். (கட்டுவிச்சி கட்டேறி) – தெய்வத்தினால் தூண்டப்பட்டு, கொட்டாவி விடாமல், தன்னை மறந்து நிற்கும் நிலை. (சீரார் சுளகில்) – சுளகு என்றால் முறம் என்பதாகும். முறத்தின் பெருமை எனவென்றால், நெல்லையும் பதரையும் தனித்தனியே பிரிப்பதாகும். இங்கு இந்தக் கட்டுவிச்சி, மற்ற தெய்வங்கள் என்னும் பதரை அறுத்து, பெரிய திருமொழியில் (11–8–8) – மணியே மணி மாணிக்கமே – என்று கூறப்படும் எம்பெருமானைக் காட்டித் தரப்போகிறாள். எனவே சீரார் சுளகு – மேன்மையான் சுளகு – என்றார். (சில நெல் பிடித்து அறியா) – அவற்றை சில நெல் என்று கூறுகிறாள். (வேறா விதிர் விதிரா மெய் சிலிரா) – பகவத் விஷயம் கூறுவதால் கட்டுவிச்சியின் உடல் நடுங்கியது. பெருமாள் திருமொழியில் (2–9) – மெய்த்துக் கண்பனி சோர மெய்கள் சிலிர்ப்ப – என்றது போல் கட்டிவிச்சியின் நிலை இருந்தது. வால்மீகி நாரதனிடம் – ஜ்ஞாதும்

ஏவம் விதம் நரம் – மிகவும் சிறந்தவனாக இந்த உலகில் உள்ளவன் யார் – என்று கேட்டார். அதற்கு நாரதன் – ம்ருதே வக்ஷ்யாம்யஹம் புத்த்வா – நான் தெளிந்து கூறுகிறேன் – என்றான். இவ்விதம் நாரதன் ஏன் கூறவேண்டும்? வால்மீகி ஒவ்வொரு குணங்களாகக் கூறி, அவை யாருக்கு உள்ளது என்று கேட்டபடி இருந்தார். ஒவ்வொரு கேள்வியின்போதும் அந்தக் குணங்களுக்கு இருப்பிடம் இராமனே என்று இராமனை எண்ணியபடி நாரதன் மயங்கி நின்றுவிட்டான். நாரதன் வால்மீகியிடம் – எனது மனதை இராமன் தகர்த்துவிட்டான், அத்தகைய மயக்கம் தெளிந்த பின்னர் விடை தருகிறேன் – என்றான். இதனால்தான் – தெளிந்து கூறுகிறேன் – என்றான். இதனைத் திருவாய்மொழி (9–6–2) – நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும் – என்றது காண்க. நான்முகன் திருவந்தாதியில் (78) பரவச நிலையைப் பற்றிக் கூறுவது காண்போம். அந்தப் பாசுரம் கீழே உள்ளது:

கண்டு வணங்கினார்க்கு என்னாங்கொல் காமனுடல்
கொண்ட தவத்தாற்கு உமை உணர்த்த வண்டலம்பும்
தாரலங்கல் நீண்முடியான்றன்பெயரே கேட்டிருந்தங்
காரலங்கல் ஆனமையால் ஆய்த்து.

இதன் பொருளை பெரியவாச்சான்பிள்ளை இங்கு விளக்கியுள்ளார். (காமனுடல் கொண்ட தவத்தாற்கு) – தானும் தனது நாயகியும் சேர்ந்ததற்குக் காரணமானவன் என்பதால் மன்மதனை எரித்த ருத்ரன். (உமை உணர்த்த) – அவனிடம் பார்வதி தனது முகக்குறிப்பால் – இப்படிப்பட்ட திருநாமங்களை உடையவன் யார் – என்ற கேள்வி மூலம் பதிலையும் உணர்த்தினாள். அப்போது சிவன் சிஷ்ய–ஆசார்ய இலக்கணங்களை மறந்து, தென்றல் காற்றும் மழைத்துளியும் தன் மேனியில் பட்டதையும் மறந்து, அவளிடம் எம்பெருமானின் திருநாமங்களைக் கூறும்படிச் சொல்லி, தன்னை மறந்து நின்றான். காமனை எரித்த கல்நெஞ்சம் படைத்த சிவனின் கதியை நேரில் கண்டவர்கள் என்னாவரோ?

(கைமோவா) – பாவநாப்ரகர்ஷத்தாளே விரைகுழவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும் என்கிறபடியே கை திருத்துழாய் நாறுமிறே. (பேராயிரமுடையானென்றாள்) – நாமம் பலவுமுடை நம்பியிறே இப்படி பண்ணினானும். (பேராயிரமுடையானென்றாள்) – ஒன்று தோற்றிற்று, இரண்டு தோற்றிற்று, நாலு தோற்றிற்று, பத்து தோற்றிற்று, நூறு தோற்றிற்று, ஆயிரம் பேர் தோன்றா நின்றதீ என்றாள். (பேர்த்தேயும் காரார் திருமேனி காட்டினாள்) – ச்ரமஹரமான மேகத்தைக் காட்டி வடிவைக் காட்டினாள். காரார் திருமேனி கண்டதுவே காரணமாகவிறே இவள்தான் இப்படிப்பட்டது.

விளக்கம் – இனி கட்டுவிச்சி தான் கண்டறிந்த உண்மைகளை சாடையாகக் கூறத் தொடங்குகிறாள். (கைமோவா) – திருவாய்மொழி (10–6–7) – விரை குழவு நறுந்துளவம் மெய்ந்நின்று கமழும் – என்று கூறுவது போல், எம்பெருமானைப் பற்றியே எப்போதும் நினைத்துள்ளதால், இவளது கைகளில் துளசி மணம் வீசுகின்றது. (பேர் ஆயிரம் உடையான் என்றாள்) – இவளை இவ்விதம் செய்பவன் பெரிய திருமொழியில் (10–8–4) நாமம் பலவும் உடை நம்பி – என்பது போன்று ஆயிரம் நாமங்கள் உடையவன் – என்று கட்டுவிச்சி கூறினாள். இவனது பெயரைக் கண்டுபிடிப்போம் என்றால் ஒன்று வந்து, இரண்டு வந்தது, நான்கு வந்தது, நூறு வந்தது, ஆயிரம் வந்ததும் நிற்கவில்லை. (பேர்த்தேயும் கார் ஆர் திருமேனி காட்டினாள்) – காண்பவர்களின் மனதை, அவர்கள் துன்பத்தில் இருந்து விடுபடச் செய்யவல்ல, நீர் கொண்ட மேகத்தைக் காட்டி, அவனது திருமேனி இந்த நிறமே – என்று கட்டுவிச்சி கூறினாள்.

திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நம்பெருமாள் திருவடிகளே தஞ்சம்

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

# அமலனாதிபிரான்
(பகுதி – 4)

(அடியார்க்கு) – ரத்நஹாரீ ச பர்த்திவ: என்கிறபடியே இவ்வஸ்துவின் சீர்மையாலே இது நம்மளவிலடங்காது, நம்மடியார்க்காமித்தனையென்று அவர்களுக்காக்கி னானென்கிறார். (அடியார்) – தன் பக்கலிலே நிக்ஷிப்தபரராயிருக்குமவர்கள்.

விளக்கம் – இராமாயணத்தில் – ரத்நஹாரீ ச பர்த்திவ – இரத்தினக்கற்களை உரிமையுடன் அரசன் எடுத்துக் கொள்ளலாம் – என்று கூறுவது போன்று என்னை உரிமையுடன் கைக்கொண்டான். என்னிடம் என்ன பெருமை கண்டான் என்று எனக்குப் புரியவில்லை, என்னைத் தனக்கு மட்டும் அல்லாமல் தன்னுடைய அடியார்களுக்கும் அடிமையாக்கினான்.

(என்னையாள்படுத்த விமலன்) – தன்னிடையாட்டமுமறியாதவென்னைத் தன்னடியார்க்கு சேஷபூதனாக்கின சுத்தனென்கிறார். (என்னை) ப்ரக்ருதிக்கடிமை செய்து போந்தவென்னை. தந்த தனத்தின் சீர்மை அறியாத என்னை. (என்னை) – தேஹாத்மாபிமாநிகள் தீண்டாதவென்னை. நன்மைக்குத் தனக்கவ்வரு கில்லாதாப்போலே தீமைக்கு எனக்கவ்வருகில்லாத என்னை. (ஆள்படுத்த) – அவர்களோடே ஒப்பூணுண்ண வைத்திலன். அவர்களுக்கு சேஷமாக்கினான். பகவச் சேஷத்வத்தளவிலே நின்றால் மீளசங்கையுண்டு, பாகவத சேஷத்வத்தளவும் சென்றால் மீளப்போகாதே. உகப்பாலே வருமதாகையாலே. ஒரு க்ஷேத்ரம் பத்தெட்டு க்ரயம் சென்றால் மீள விரகில்லை. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முதலிகளுடைய விஷயீகாரம் பெருமாளுடைய விஷயீகாரத்துக்கு முற்பட்டாப்போலே இவர்க்குத் ததீய விஷயீகாரம் முற்பட்டபடி. தத்ருசு:, ஆநயைநம் ஹரி ச்ரேஷ்ட அங்கு. இங்கு லோகஸாரங்கமஹாமுனிகளைப் போய் ஆழ்வாரை அழைத்துக் கொண்டு வாருமென்றான்.

விளக்கம் – (என்னையாள்படுத்த விமலன்) – அவனது விஷயம் குறித்து ஏதும் அறியாமல் உள்ள என்னை அவனது அடியார்களின் தொண்டனாக்கிய தூயவன் என்றார். (என்னை) – இந்த உலக விஷயங்களுக்கு மட்டுமே அடிமையாக இருந்த என்னை. அவன் எனக்கு அளித்துள்ள செல்வத்தின் பெருமை அறியாத என்னை. (என்னை) – இந்த உடலையே ஆத்மா என்று நினைக்கும் தாழ்ந்தவர்கள் கூட ஒதுக்கும் அளவிற்குத் தாழ்ந்தவனான என்னை. (ஆள்படுத்த) – பகவானிடம் அடிமையாக இருந்தால்கூட நழுவ வாய்ப்புண்டு, ஆனால் அவன் அடியார்களுக்கு அடிமையானால் நழுவ வாய்ப்பில்லை – காரணம், இந்த நிலை அவன் மீது கொண்ட உகப்பால் வருவதாகும். விபீஷணனுக்கு இராமனின் அறிமுகம் கிட்டுவதற்கு முன்பாக, இராமனின் அடியாரான சுக்ரீவனின் அறிமுகம் கிட்டியது. இதேபோன்று ஆழ்வாரும் பெரியபெருமாளிடம் செல்வதற்கு முன்பாக அடியாரின் அறிமுகம் கிட்டப்பெற்றார். சுக்ரீவனிடம் விபீஷணனை அழைத்து வரும்படி எம்பெருமான் இராமாயணத்தில் கூறினான். இங்கு லோகஸாரங்கமஹாமுனிகளிடம் ஆழ்வாரை அழைத்து வரும்படிப் பணித்தான்.

(அடியார்க்கென்னை ஆட்படுத்த) – தான் சேஷித்வத்தினுடைய எல்லையிலே நின்றாப்போலே சேஷத்வத்தினெல்லையிலே என்னை வைத்தான். (விமலன்) – என் சிறுமை பாராதே ததீயர்க்கு சேஷமாக்குகையால் வந்த ஔஜ்வல்யம். எதிரிகளை தரம்பாராதே சீரியர் தந்தாமளவிலேயிறே கொடுப்பது.

விளக்கம் – (அடியார்க்கென்னை ஆட்படுத்த) – எஜமானத்தனத்தின் எல்லையாக அவன் உள்ளது போன்று என்னைக் கைங்கர்யத்தனத்தின் எல்லையில் வைத்தான். (விமலன்) – என்னுடைய தாழ்மை ஏதும் பாராமல் அவனது அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்யும்படி வைத்தது அவனது ஔஜ்வல்ய குணம். வந்தவர்கள் விரோதிகளாயினும் நன்மை செய்வது நல்லவர் குணம் அன்றோ?

(விண்ணவர்கோன்) – ஆளில்லாதவன் கிடீர் இப்படி விஷயீகரித்தான். நித்யசூரிகள் எடுத்துக் கைநீட்டும்படி இருக்கிறவன் கிடீர் கதிர் பொறுக்கி ஜீவிப்பாரைப்போலே நித்யஸம்ஸாரியாயிருக்கிறவென்னை நித்யமுக்தரோடொக்க விஷயீகரித்தான். இவ்வௌதார்யம் கற்றதும் அவர்களோடே கிடீரென்றுமாம். அஸ்மாபிஸ்துல்யோபவது என்றார்களிறே. (விண்ணவர்கோன்) – இங்குத்தைக் குழாத்தையொழிய அங்குத்தைக் குழாத்தையும் காட்டித்தந்தான். உடன் கூடுவதென்று கொலோ என்று இவர் ஆசைப்படவேண்டுவதில்லை. (கோன்) – அவர்களாலும் எல்லை காணவொண்ணாது. (விரையார் பொழில் வேங்கடவன்) – பரிமளம் நிறைந்திருந்துள்ள சோலையையுடைய திருவேங்கட மலையையுடைவன். பெரியபெருமாளைப் பாடாநிற்கத் திருமலையிலே போவானென்னென்னில் – ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச்சொல்லியிறே கவிபாடுவது. பரமபதத்தில் நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே, ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காணும் கோயிலுக்கு வந்தது என்று பட்டரருளிச்செய்யும்படி. அன்றியே, கோயில் போக்யதை தமக்கு நிலமல்லாமையாலே திருமலையிலேபோய் தரிக்கப்பார்க்கிறாரென்றுமாம். (விரையார்) – நித்யஸூரிகளையுடையனாவதுக்கு மேலே ஓர் ஐச்வர்யம்.

விளக்கம் – (விண்ணவர்கோன்) – இவ்விதம் தாழ்ந்தவனான என்னை அவன் பக்கம் சேர்த்தது வேறு யாரும் கிட்டாமையாலா? அல்ல. நித்யசூரிகள் பலரும் சூழ உள்ளவன் அவன். அன்றாடம் ஜீவனத்துக்காக நெல் சேகரித்தபடி உள்ளவன் போன்று, என்றும் ஸம்ஸாரத்தில் சிக்கியபடி உள்ள என்னை, நித்யமுக்தர்களுடன் சேர்த்தான். இராமாயணம் யுத்தகாண்டத்தில் – அஸ்மாபிஸ்துல்யோபவது – சுக்ரீவன் இராமனிடம், விபீஷணன் நமது நண்பனாக இருக்கட்டும் – என்று கூறினான். எம்பெருமான், என்னை நித்யசூரிகளுடன் சேர்த்து வைக்கும் ஔதார்ய குணத்தை சுக்ரீவனிடமிருந்து கற்றான் போலும். இங்குள்ள அடியார்குழாம் மட்டும் அல்லாமல், பரமபதத்தில் உள்ள அடியார்குழாத்தையும் காட்டினான். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (2–3–10) – உடன் கூடுவது என்று கொலோ – என்று ஏங்கியது போன்று திருப்பாணாழ்வார் ஆசைப்படக்கூட நேரம் இல்லாதபடி சேர்த்து வைத்தான். (கோன்) – அந்த நித்யசூரிகளாலும் இவனது குணங்களைப் பற்றிய எல்லைகள் காண இயலாதபடி உள்ளவன். (விரையார் பொழில் வேங்கடவன்) – பரிமளம் கமழும் சோலைகள் எங்கும் சூழ்ந்த இடமாகிய திருவேங்கடமலையைத் தனது இருப்பிடமாக உள்ளவன். இங்கு ஓர் ஐயம் ஏற்படலாம் – பெரியபெருமாளைப் பற்றிப் பாடிக்கொண்டுள்ளபோது, திடீரென திருமலையைப் பற்றிக் கூறுவது ஏன் – இவ்விதம் பட்டரிடம் ஒரு சிலர் கேட்டனர். அதற்குப் பட்டர் – ஒருவனைப் பற்றிக் கூறும்போது அவன் எங்கிருந்து வந்தவன் என்று புகழ்ந்து கூறுவது வழக்கம். பரமபதத்திலிருந்து புறப்பட்டு மதுரா நகரில் தங்கி, பின்னர் திருஆய்ப்பாடிக்கு வந்தான். அது போன்று, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து புறப்பட்டு, திருமலைக்கு வந்து, திருவரங்கத்துக்கு வந்தான் – என்றார். அல்லது திருவரங்கப் பெரியகோயில் தன்னால் எளிதாகச் சென்று அனுபவிக்க இயலாமல் உள்ளதால், திருமலைக்குச் சென்று உயிர் தரிக்கப் பார்க்கிறார். (விரையார்) – நித்யசூரிகள் என்ற பெரும் ஐச்வர்யம் உள்ளவன், அவர்களை விட இவரை உயர்ந்த ஐச்வர்யம் என்று கொள்பவன்.

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

.. .. தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ர சிறப்புப் பகுதி

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளையின் திருநக்ஷத்ரமான க்ருஷ்ணாஷ்டமி ரோஹிணி, இந்த மாதம் 04.09.2007. அதற்கான சிறப்புப் பகுதியாக, பெரியதிருமுடியடைவு என்ற நூலில் இருந்து ஸ்வாமியைப் பற்றிய பகுதிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இவை எளிதான தமிழிலேயே உள்ளதால் மேலும் விளக்கப்படவில்லை.

## கோயில் கந்தாடைநாயன் அருளிச்செய்த பெரியதிருமுடியடைவு

பெரியவாச்சான்பிள்ளைக்குத் திருவவதார ஸ்தலம் சோழமண்டலத்தில் சங்கநல்லூர். திருநக்ஷத்ரம் ஸர்வஜித் வருஷம் ஆவணி மாஸம் க்ருஷ்ணாஷ்டமி ரோஹிணி குலம் பூர்வசிகை. குடி சங்கநல்லூர். திருத்தகப்பனார் யாமுனதேசிகர். திருத்தாயார் நாச்சியாரம்மன். திருநாமங்கள் பெரியவாச்சான்பிள்ளை, அபயப்ரதராஜர், ஸ்ரீமத்க்ருஷ்ணர். ஆசார்யர் நம்பிள்ளை. திருவாராதனம் க்ருஷ்ண விக்ரஹம். இருப்பிடம் கோயில். இவர் செய்தருளின க்ரந்தங்கள் திருவாய்மொழி வ்யாக்யானம் இருபத்துநாலாயிரம், மற்ற ப்ரபந்தங்களுக்கு வ்யாக்யானங்கள், பரந்த ரஹஸ்ய விவரணம், மாணிக்க மாலை, நவரத்ன மாலை, ஸகலப்ரமாணதாத்பர்யம், உபகாரரத்னம், கத்யத்ரய வ்யாக்யானம், ஆளவந்தார் ஸ்தோத்ர வ்யாக்யானம், அபயப்ரதான வ்யாக்யானம், சரம ரஹஸ்யம், அனுஸந்தான ரஹஸ்யம், நிகமனப்படி. இவர் தொண்ணூற்றஞ்சு திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார். இவர் க்ருஷ்ணனுடைய திருநக்ஷத்ரத்திலே திருவவதாரம். இவர் சிஷ்யர் திருமகனாராய் நாயனாராச்சான்பிள்ளை, பரகாலதாஸர், பின்பழகிய பெருமாள் ஜீயர், ஸ்ரீரங்காசார்யர் முதலானர்கள்.

இவர்க்குத் தனியன்

ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுந ஸூநவே
யத் கடாக்ஷை கலக்ஷ்யாணாம் ஸுலப: ஸ்ரீதரஸ் ஸதா

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்